விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 28 வெள்ளிக்கிழமை (13.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 025

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இலங்கைக்கு அக்கறை இல்லை

**கனடா சுட்டிக்காட்டு**

### போர்க் குற்ற விசாரணை அவசியம் எனவும் வலியுறுத்து

(ரொரன்டோ), இலங்கையில் இறுதிப் போரின்போது இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் குறித்து சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கனடா வலியுறுத்தியுள்ளது.

அத்துடன் பொறுப்புக்கூறுதல் மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றில் இலங்கை அரசு அக்கறை காண்பிக்கவில்லை எனவும் கனடா சுட்டிக்காட்டியுள்ளது.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசினால் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட பின்னர், அதற்கு பதிலளிக்கும் வகையில் முதல்முறையாக கனடா இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புக் கோரும்படி சவேந்திர சில்வாவுக்கு ஜனாதிபதி உத்தரவு



ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவின் மகளிடம் தவறாக நடந்து கொண்டதற்காக உடனடியாக மன்னிப்புக் கோரும்படி, ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ (20ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அதிகாரிகள் இலங்கை வருகின்றனர்

அமெரிக்காவின் நான்கு சிரேஷ்ட அதிகாரிகள் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். இவர்கள் இலங்கை அரசாங்க தரப்பினர், சிவில் சமூகப் பிரதிநிதிகள், வர்த்தக தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் 49 ஆயிரம் வீடுகள் திட்டம் மூன்று கட்டங்களாக செயற்படுத்த முடிவு

இலங்கை – இந்திய அரசுகளுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இந்திய அரசாங்கத்தின் 49 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை மூன்று கட்டங்களாக செயற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் 13.19 பில்லியன் ரூபாய் நிதியுதவியில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இதன்படி முதல்கட்டமாக தலா 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 38 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட உள்ளதோடு 4 தவணை முறையில் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு பணம் செலுத்தப்படவுள்ளது.

இரண்டாம் கட்டமாக 5 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதோடு அதற்கான பணம் மூன்று தவணை முறையில் பயனாளிகளுக்கு நேரடியாக கையளிக்கப்படவுள்ளது. மூன்றாம் கட்டமாக 6 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவை வடக்கு கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களுக்காக செயற்படுத்தப்படவுள்ளன. அதனைத் தவிர மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கென 4 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வடக்கு கிழக்கு வீட்டுத் திட்டப்பணிகள் மீள்குடியேற்றத்திற்கான ஜனாதிபதி செயலணி, வடக்கு அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு பிரிவு (20ஆம் பக்கம் பார்க்க)

**அன்பு வாசகர்களே!**




தெய்வீக வர்ணக் கலண்டர் நாளைய வலம்புரியுடன் வெளிவருகிறது. தவறாது கேட்டு வாங்குங்கள்.

## ஐ.தே.வின் தொடர் தோல்விக்கு மகிந்த-ரணில் ஒப்பந்தமே காரணம்

### சஜித் அணி வெளியிடும் தகவல்



தேர்தல்களில் தொடர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்கும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் செய்து கொண்டுள்ளதாகக் கூறப்படும் உடன்படிக்கையை அம்பலப்படுத்தும் நூல் ஒன்று அடுத்த வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாக ரணிலின் போட்டிக் குழுவான சஜித் பிரேமதாச குழுவினர் அறிவித்துள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் ஆனந்த லனிறோலே எழுதிய இந்த நூல் எதிர்வரும் 17ம் திகதி வெளியிட்டுவைக்கப்படவிருக்கின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பை சந்திப்பாரா கிருஸ்ணா?

### நிகழ்ச்சிநிரலில் குறிப்பு இல்லை

இலங்கைக்கான விஜயத்தை அடுத்த வாரம் மேற்கொள்ளும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்து பேசுவாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா கொழும்பு வந்து சேர்ந்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்திப்பார் என்று முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் எஸ்.எம்.கிருஸ்ணாவின் இலங்கைக்கான பயண நிகழ்ச்சி நிரலை நேற்று முன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது. இதன்படி முதலாவது சந்திப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெறும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு தொடர்பாக எந்தக் குறிப்பும் இடம்பெறவில்லை. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எஸ்.எம் கிருஸ்ணா சந்திப்பாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

கடந்த 14 மாதங்களில் 2வது தடவையாக இலங்கைக்கு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா கொழும்பில் தங்கியிருக்கும்போது இலங்கையுடன் குறைந்தது 6 (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களை பிடித்துவந்த சிங்கள மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய தென்னிலங்கை சிங்கள மீனவர்கள், இரு இந்திய மீனவர்களை பிடித்து வந்து நயினாதீவு கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கை கடற்பரப்பிற்குள் ரோலர் படகு ஒன்றில் மீன்பிடி (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் வாழ்க்கைச் செலவு அதிகரித்த மாவட்டமாக யாழ்ப்பாணம்

இலங்கையில் ஆகக்கூடிய வாழ்க்கைச் செலவு கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் காணப்படுவதாக குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள உத்தியோக பூர்வ தரவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தனிநபர் ஒருவர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறைந்தபட்சம் 3 ஆயிரத்து 307 ரூபாயினைத் செலவு செய்ய வேண்டியிருந்தது. எனினும் இது மாவட்டங்களைப் பொறுத்து வேறுபட்டதுடன், தனிநபர் வாழ்க்கைச் செலவு ஆகக்கூடிய மாவட்டமாக யாழ்ப்பாணம் (ரூ.3 ஆயிரத்து 555) காணப்படுவதனை புள்ளிவிபரத் தரவுகள் காட்டுகின்றன.

இதற்குபிற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணம் அதிகளவு இறக்குமதிப் பண்டங்களில் தங்கியிருப்பதும் அவற்றைக் கொண்டுவர ஏற்படும் தரகு மற்றும் போக்கு வரத்து செலவுகளே யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலைவாசிகளை உயர்த்தி விட்டுள்ளதாக பொருளியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இலங்கையில் வாழ்க்கைச் செலவு அதிகமாக உள்ள முதல் 3 மாவட்டங்களைப் பட்டியல்படுத்தும்போது, யாழ்ப்பாணம் (3,555), கொழும்பு (3, 542),மற்றும் மட்டக்களப்பு (3, 522) ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன. (20ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# யாழ்.பல்கலைக்கழக மாணவனுடன் தகராறில் ஈடுபட்டவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவரிடமிருந்து ஆய்வுக்கட்டுரையை பறிமுதல் செய்த நபரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று யாழ். நகர்ப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்றுபிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் உள்ள போட்டோ பிரதி எடுக்கும் நிலையத்தில் தனது ஆய்வுக் கட்டுரையை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பிரதி எடுத்துக் கொண்டிருந்த போது மதுபோதையில் வந்த நபர் ஒருவர் அந்த ஆய்வுக்கட்டுரையை பறிமுதல் செய்தார்.

இதனால் அதிர்ச்சியடைந்த மாணவன் தனது ஆய்வுக்கட்டுரையை தரும்படி குறித்த நபரிடம் வேண்டுகோள் விடுத்தார். இருப்பினும் மாணவனின் ஆய்வுக்கட்டுரையை கொடுக்க குறித்த நபர் மறுத்துவிட்டார்.

இதனால் மாணவனுக்கும் அந்த நபருக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. அத்தோடு சம்பவ இடம் பெற்ற இடத்தில் பலர் ஒன்று கூடினார்.

பாதிக்கப்பட்ட மாணவன் தன்னுடன் வந்த சக மாணவர்களுக்கு சம்பவத்தை அறிவித்தவுடன் அந்த தகவல் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதேவேளை பல்கலைக்கழக மாணவனிடமிருந்து ஆய்வுக்கட்டுரையை பறிமுதல் செய்த நபர் தாம் ஈ.பி.டி.பிக் கட்சியை சார்ந்தவர் எனவும் தன்னுடன் மோதினால் விளைவுகள் மோசமாக இருக்கும் எனவும் எச்சரித்தார்.

அதுமட்டுமன்றி ஊடகவியலாளர்களை சுடுவேன் எனவும் அச்சுறுத்தல் விடுத்தார்.

குறித்த நபர் தொடர்பாக ஈ.பி.டி.பிக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர், கமலேந்திரனிடம் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு தெரிவித்தபோது இப்படிப்பட்டவர்கள் தமது கட்சியில் இல்லை எனவும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்கமுடியும்எனவும்தெரிவித்தார்.

அத்தோடு இந்த சம்பவத்துக்கும் தமதுகட்சிக்கும்எந்தவிதத்திலும்தொடர்பு இல்லை எனவும் தெரிவித்தார்.

இருப்பினும் யாழ்ப்பாணப் பொலிஸார்மதுபோதையில்மாணவர்களுடன் தகராறில்ஈடுபட்ட நபரை கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். (பா-6)


O/Level இன் பின்னர்

பெறுபேறுகள் வரும் வரை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை கற்க இதுவே சிறந்த தருணம்

O/L மாணவர்களுக்கு விசேட கட்டணச்சலுகை

Diploma in Information Technology
Diploma in IT & Web Programming
Advanced Diploma in Hardware & Networking

Multimedia Courses
Video Production
Digital Pre-Press
Web Animation
Web Development
Professional Graphic Design
Cartoon Animation

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

Registered with Tertiary & Vocational Education Commission of Sri lanka

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-2262399
230, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267


# யாழ்ப்பாணத் திருவிழா நிகழ்வுகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினால் தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்ப்பாணத்திருவிழா கலைநிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பல்வேறு இடங்களிலும் ஆரம்பமாகவுள்ளன.

இதில் கலை நிகழ்வுகளாக யாழ். முனியப்பர் கோவில் சுற்றாடல் பகுதியில் மாபெரும் பொங்கல் போட்டி மற்றும் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கு முன்றலில் மரதன் ஓட்டப் போட்டியும் இன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாவதோடு கடல்சார் போட்டிகளான நீச்சல், வள்ளம்தாங்கல், படகோட்டல், போன்றவை குருநகர் கடற்கரையில் காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளன.

மற்றும் மாலை நிகழ்வுகளாக 4 மணியளவில் தமிழ்த்தாய் வணக்கத்தோடு பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்வுகளும், சொல்லாடுகளம் எனும் விவாதமும் இடம்பெறவுள்ளன.

எனவே இந் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். இப்போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கு நினைவுச்சின்னங்களும், சான்றுதழ்களும் பணப்பரிசில்களும் வழங்கவுள்ளதாக யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது. (பா-4)

# சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றின் ஊழியர்களுக்கான அடிப்படை சம்பளம் 18 சதவீதத்தினால் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2 ஆயிரத்து 500 ரூபாய் மேலதிக கொடுப்பனவுக்கு மேலதிகமாகவே அடிப்படை சம்பளம் அதிகரிப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# நீதி அமைச்சின் புதிய செயலாளராக கமலினி டி சில்வா

(கொழும்பு)

நீதி அமைச்சின் புதிய செயலாளராக கமலினி டி சில்வா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஜனவரி 16ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

1977ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சத்திய பிரமாணம் செய்த இவர், 1984ஆம் ஆண்டுமுதல் நீதியமைச்சில் கடமையாற்றி வருகின்றார். நீதி அமைச்சில் உதவி செயலாளராக இணைந்த இவர் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

கொழும்பு விசாகா கல்லூரியின் பழைய மாணவியான கமலினி, முன்னாள் சட்டமா அதிபரும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவருமான சி.ஆர்.டி.சில்வாவின் மனைவியும் ஆவார். (பா)


SLAS போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில்
வெள்ளி இன்று 1-5மணிவரை
சனி 9-3
ஞாயிறு 1-5
ஏனைய நேரங்கள் வகுப்பில்
வவுனியா அம்பாள் கல்வி நிலையத்தில்
சனி 9-3 மணிவரை
ஞாயிறு 10- 3
தொடர்புக்கு: 0754164564
(C-5520)



பெயர் மாற்றம்

புங்குடுதீவை பிறப்பிடமாகவும், இல.61 அளுத்வத்தை றோட், சிலாபத்தை வசிப்பிடமாகவும் கொண்ட (பிறப்பு சான்றிதழ் இல.4381) வீரகத்தி நடேசன் ஆகிய நான் இன்று முதல் வீரகத்தி யோசப் என எனது பெயரை மாற்றிக் கொள்கிறேன். இன்றுமுதல் சகல ஆவணங்களிலும் வீரகத்தி யோசப் என்றே கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

(7287) -வீரகத்தி யோசப்



'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர்
(7239)


# கணனி உபகரணங்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கணனிபயிற்சிநிலையத்தில் நேற்று முன்தினம் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம்தொடர்பாகதெரியவருவதாவது,

குப்பிளான் கணனி பயிற்சி நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கணனி உபகரணங்கள் திருட்டுப்போயுள்ளன.

சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (பா-6,11)


பாராட்டி வாழ்த்துகிறோம்



28.12.2011 ஆந் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை வேலைகள் பகுதியின் பொறியியலாளராகக் கடமையேற்றுள்ள உயர்திரு.எட்வேட் சத்தியசீலன் (பொறியியலாளர்)

அவர்கள் தனது சிறந்த சேவையை வழங்கவும் மேலும் பல உயர்பதவிகளைப் பெற்று சிறப்புடன் வாழவும் இறைவனை வேண்டி எமது அன்பான பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். பாடசாலைச் சமூகம்

யா/முத்துத்தம்பி ம.வி.

[சி-5517]



"கற்பவை கற்க; கற்பவை கசடறக் கற்க"

YAALH ENGLISH ACADEMY

நிறுவுநர் + ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

Practical English Courses

- ஆசிரியர்க்கு
- உத்தியோகத்தர்க்கு
- உயர்கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- தாய்மார்க்கு: உங்கள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் பெரும் பயன்.

ஆரம்பம் : 21.1.2012 / இலவசம் : முதலிரு வகுப்புக்கள்

முழுவிபரங்கள் பெற + பெயர் பதிவு செய்ய : 077 3212 711

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ் நகர்

(7238)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA

The Only Official French Language Centre in Jaffna

Learn French the French Way

யாழ்ப்பாணத்தில் French Embassyஆல் அங்கிகரிக்கப்பட்ட ஒரே ஒரு மொழி பயிலும் மையமான Alliance Française de Jaffnaஇன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.

வகுப்புகள் : சனி, ஞாயிறுகளில்...

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093

E-mail: alliancejaffna@yahoo. com

(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)

மேல்திக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்.

(7292)






பாடசாலை மாணவர்களுக்கு

மாபெரும் விலைக் கழிவு

கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)

SILVER SHIELD SOCKS

பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் சிறியோர் முதல் பெரியோர் வரை சகல தரத்திலும் சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள





குறிப்பு:- பாடசாலைகளுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் மேலதிக கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீ முருகன்



303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5392

(சி-5518)

# இன்று ஒரு தகவல்

## முயலுக்கு மூன்று கால்

ஒரு ஊரிலே ஒரு குருவும் சீடனும் இருந்தார்கள். இவர்கள் இருவரும் ஒரு மாதிரியானவர்கள்.

ஒருநாள் சீடன் முயல் வேட்டைக்குக் கிளம்பினான். காட்டுக்குப் போனான். ஒரு முயல் அவனுக்குக் கிடைத்தது. அதைப்பிடித்துக் கொண்டு வந்தான். அதனை நெருப்பிலே வாட்டி அதன் கால் ஒன்றை சாப்பிட்டு விட்டான். மீதியாக மூன்று கால்கள் இருந்தன.

அதை கொண்டு போய் தன் குருவிடம் மிகவும் பணிவோடு கொடுத்தான்.

அந்தக் குரு என்ன? அந்த அளவுக்கு ஒன்றுமே புரியாத அப்பாவியா? மிகவும் சுறுசுறுப்பு நிறைந்தவர்.

"முயலின் இன்னொரு கால் எங்கேயப்பா?" என்று கேட்டார்.

சீடன் பார்த்தான் ''நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தானே இருந்தது'' என்றான்.

சீடன் பொய் கூறுவது குருவுக்கு தெரிந்து விட்டது. இவனது பொய்யை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

அதனாலே அப்போதைக்கு அந்த விடயத்தை அப்படியே விட்டு விட்டார். நாட்கள் சென்றபின் சீடனை அழைத்தார்.

"நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால்?" என்று கேட்டார்.

"மூன்று கால் தான் குருவே" என்றான்.

மறுபடியும் ஒரு தடவை இப்படியே கேட்டார். அவனும் இப்படியே பதிலளித்தான்.

சரி! சீடன் பரவாயில்லை. பொய்யைக் காப்பாற்றுவதில் மிகவும் பிடிவாதமாகத் தான் இருக்கிறான் என்பது தெரிந்துவிட்டது. இவனுக்கு இன்னொரு பரீட்சை வைத்துப் பார்க்க வேண்டுமென முடிவு செய்தார்.

மீண்டும் ஒருநாள் சீடனை அழைத்தார். அவன் என்ன குருவே! என்று கூறி முன்னால் வந்து நின்றான்.

அவன் நெற்றியிலே அகலமாக ஒரு பொட்டு வைத்து விட்டு ''நீ தினமும் எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்'' என்று கூறினார்.

"செய்கிறேன் குருவே!" என்று பதிலளித்தான்.

''தினமும் ராஜாவுக்கு வைத்திருக்கும் உணவைத் தெரியாமல் திருடிக் கொண்டு வந்து என்னிடம் தரவேண்டும்'' என்றார்.

''இவ்வளவுதானே... கவலைப்பட வேண்டாம்... என்று சொல்லி விட்டு அவன் போனான். சொன்னபடியே ராஜாவின் உணவைத் தெரியாமல் திருடிக் கொண்டு வந்து விட்டான்.

ஒருநாள்... இரண்டு நாட்கள் இல்லை. தொடர்ந்து அதே மாதிரி தனது வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டான். தினமும் தன்னுடைய உணவு திருட்டுப் போனது ராஜாவுக்கு அவமானமாகப் போய்விட்டது.

ராஜா யோசித்தார். திருடன் யார் என்பதைக் கண்டு பிடித்தே ஆகவேண்டும் என்று முடிவு செய்தார்.

என்னுடைய உணவை திருடிச் செல்பவரைப் பிடித்துத் தந்தால் ஆயிரம் பொற் காசுகள் வழங்குவேன் என்று அந்த ராஜா ஊர் அறிய அறிவித்தார்.

உடனே இந்தக் குரு ராஜாவிடம் போனார். கறி, குழம்பு ஆகிய வற்றை மிகவும் சூடாக இருக்கிற மாதிரி சுடச்சுட வைத்திருந்தால் திருடனைக் கையும் மெய்யுமாக கண்டு பிடித்து விடலாம் என்று ஆலோசனை வழங்கினார்.

குரு இப்படியாகச் சொல்கிறார் என்பதால் குழம்பு, கறி என்பவற்றை சுடச்சுட ஆவி பறக்கிற அளவிற்கு இருக்கிற மாதிரி ஏற்பாடு செய்தார்.

இந்தச் சீடன் வழக்கம் போல நெற்றியிலே பொட்டு வைத்துவிட்டு, ராஜாவின் உணவைத் திருடப் போனான். பாத்திரத்திலே எல்லாம் சூடாக இருந்தது. ஆவி பறந்தது. இவன் அப்படியே ஏதும் செய்ய முடியாமல் அந்தப் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

அந்த ஆவி இவன் நெற்றியிலே பட்டு பொட்டு வியர்வையிலே கரைய ஆரம்பித்துவிட்டது. பொட்டு அழிந்து இருந்ததை வைத்து திருடன் யார் என்பதை சுலபமாக ராஜா கண்டு பிடித்துவிட்டார்.

அதன்பின்னர் ராஜா அமைதியாகவா இருப்பார்?

உடனே ''என்னுடைய உணவைத் திருடிய இவனை சிறையில் அடையுங்கள்'' என்றார்.

அதாவது "அவன் தலையை வெட்டிப் போட்டு விடுமாறும்" உத்தரவு பிறப்பித்தார்.

தண்டனையை நிறைவேற்றுவதற்காக அவனை அழைத்துக் கொண்டு போனார்கள். அந்தச் சமயம் பார்த்து குரு அங்கே வந்தார்.

''அடேய் சிஷ்யா! இப்போதாவது நீ பிடித்த முயலுக்கு எத்தனை கால்கள் என்று உண்மையைக் கூறு. உன்னை இந்தத் தண்டனையில் இருந்து காப்பாற்றி விடுகிறேன்'' என்றார்.

அப்போதும் அவன் ''நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் குருவே'' என்று அடாவடியாகக் கூறினார்.

குரு அசந்து போனார். நேராக ராஜாவிடம் போய் இவனுக்காக சிபாரிசு செய்த சிஷ்யனுக்குக் கொடுத்த தண்டனையை இரத்து செய்தார்.

அதன்பின் சீடனை அழைத்துக் கொண்டு போய் உபதேசம் செய்ய ஆரம்பித்தார்.

சொன்னது பொய்யாக இருந்தாலும் கூட அந்தப் பொய்யை காப்பாற்றுவதிலே எவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறான்.

இப்படி இந்தக் காலத்திலே புத்திசாதுரியமாக நடந்து கொள்ளப் பழக வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ரோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட குருநகர் மீனவர்கள் 10 பேர் நேற்று கைது

## உபகரணங்கள் மற்றும் பிடிக்கப்பட்ட மீன்கள் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக ரோலர் படகுகளில் மீன்பிடித்துக் கொண்டு கரைக்கு வந்த 10 மீனவர்களை குருநகர்ப் பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாக யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் ஆர்.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பிலிருந்து வருகைதந்த கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் 5 பேர் கொண்ட குழுவினரும் யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் 10 பேர் கொண்ட குழுவினரும் இணைந்து நேற்று அதிகாலை குருநகர்ப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்ட ரோலர் படகுகளில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடித்துக்கொண்டு கரைக்கு வந்த மூன்று படகுகள் இனம் காணப்பட்டன.

குறித்த படகுகளில் மீன்பிடித்துக் கொண்டு வந்த குருநகர் பகுதியைச் சேர்ந்த 10 மீனவர்களை பொலிஸாரின் உதவியுடன் கைது செய்ததோடு அவர்களிடமிருந்து கடற்தொழில் உபகரணங்களும் சுமார் 50 கிலோகிராம் மீன்களும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட 10 மீனவர்களும் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, வல்வெட்டித்துறை இறங்கு துறைப்பகுதியில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி கடற்தொழிலில் ஈடுபட்ட 15 ரோலர் படகுகள் இனங் காணப்பட்டு கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளினால் கடற்தொழில் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதோடு மீனவர்களும் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதுவே முதல் முறையாக ரோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கையாகும்.

இந்நிலையில் நேற்று குருநகர் பகுதியில் வைத்து இரண்டாவது முறையாக மூன்று ரோலர் படகுகள் இனம் காணப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக கொழும்பிலிருந்து வந்த திணைக்கள அதிகாரிகள் கூறுகையில், இவ்வாறான சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை மீனவர்கள் நிறுத்த வேண்டும் எனவும் நிறுத்தும் வரை தொடர்ந்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தனர். (2-6)

# இலவச கண் பரிசோதனை

சமூகசேவை அடிப்படையில் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதன்போது கண் பரிசோதனை இலவசமாக நடைபெறுவதுடன் மிகக் குறைந்த விலையில் கண்ணாடிகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-7)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 170 |
| தக்காளி | 70 | 60 | 120 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 40 | 30 |
| கோவா | 80 | 70 | 80 |
| கரட் | 80 | 80 | 100 |
| பூசணி | 30-40 | 60 | 60 |
| புடோல் | 55 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 60 |
| பாகற்காய் | 120 | 140 | 130 |
| வெண்டிக்காய் | 70-80 | 70 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 60 | 90 | 60 |
| பீற்றூட் | 140 | 120 | 110 |
| கறிமிளகாய் | 180 | 40 | 230 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 60 | 90 | 100 |
| கத்தரிதம்புள்ள | -- | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 10-13 | 20 | 20 |
| தேசிக்காய் | 60-70 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 15-25 | 25 |

# இராசி பலன்

*13.01.2012*
*(மார்கழி 28,வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு*
*சதுர்த்தி முற்பகல் 10.23 மணிவரை*
*பூரம் பின்னிரவு 4.11 மணிவரை*
*இராகுகாலம் 11.03-12.33 மணிவரை*
*சுபநேரம் 6.33-8.03 மணிவரை*

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் தோன்றும்.

**இடபம்** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்,எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள்,முன்னோர் வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன யோகமுண்டு.

**மிதுனம்** குடும்பத்தில் சிலரை திருப்திப்படுத்த முக்கிய பொறுப்புக்களை எடுத்து நடத்த வேண்டியேற்படலாம்,சகோதர ஒற்றுமையால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்,பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்.

**கடகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள்,குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், தொலைதூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம்,வருமானம் திருப்தி தரும்.

**சிங்கம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்,ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்,குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் நாள்,அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் கிடைக்கலாம்,சுப நிகழ்வுகளுக்காக ஒரு தொகையை செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்** செல்வநிலை உயரும் நாள்,அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றியளிக்கும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்,உறவினர் உங்கள் இல்லம் தேடி வரலாம்,தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து முடிவெடுப்பீர்கள்,மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், தொழில் ரீதியாக முக்கிய நபர்களைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள்.

**மகரம்** எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது,உடல் நலம் சீராகி செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும்,வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரும், ஆலய வழிபாட்டில் ஈடுபாடு அதிகரிக்கும், குடும்ப ஒற்றுமை பலப்படும், போசன சுகமுண்டு.

**மீனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும்நாள், ஆரோக்கியம் சீராகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

வளவன்

# 294 மில்லியன் ரூபா செலவில் பொலிஸ் நிலையத்திற்கு கட்டடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு 294 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று காலை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அருகிலுள்ள காணியில் இடம்பெற்றது என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் 1984 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் முற்றாக அழிக்கப்பட்டது.

அதன் பின்னர் தற்போது காணப்படும் இடத்தில்பொலிஸ்நிலையம் இயக்கப்படுகின்றது.

எனினும் இவ்விடம் தகுந்த வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. இதனால் மீண்டும் துரையப்பா விளையாட்டரங்கிற்கு அருகிலுள்ள காணியில் பொலிஸ் நிலையம் அமையப் பெறவுள்ளது. இக்கட்டடம் மூன்று மாடிகளை கொண்டதாக கட்டப்படுவதோடு நவீன வசதிகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்திலேயே வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம், பொலிஸ் நிலைய தலைமைப்பொறுப்பதிகாரியின் அலுவலகம், பிரதித்தலைமை பொலிஸ் அதிகாரியின் கட்டடம் என்பன அமையப்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இக்கட்டடத்திறகான நிதியினை அரசாங்கமே வழங்கியுள்ளதாகவும் இவ்வருட இறுதிக்குள் இக்கட்ட வேலைகள்அனைத்தும் நிறைவு பெறுமெனவும் தற்போது காணப்படுகின்ற பழைய கட்டடத்தில் பொதுமக்கள் தொடர்பான பிரிவுகள் இயங்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டியதோடு, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.பிராந்தியங்களின் பொலிஸ்மா அதிபர்கள் , சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர்கள் மற்றும்பொலிஸ்உயர்அதிகாரிகள்எனப்பலர்கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(2-4-6)

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண நலன்புரி நிலையத்தினால் நடத்தப்படும் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜெயந்தி விழா-2012 நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது என மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வு பஜனையுடன் ஆரம்பமாகி சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் வழங்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து சுவாமியின் வழியில் புதுயுகம் காண்போம் எனும் கருப்பொருளில் வடமாகான ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றவுள்ளார்.

இதனைத்தொடர்ந்து சுவாமி விவேகானந்தரின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட ஜெயந்திப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-7-14)

## மரதன் ஓட்டப்போட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட மட்ட மரதன் ஓட்டப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு மாலுசந்தியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சாரசபையின் பருத்தித்துறை மின் அத்தியட்சகர் க.இராஜேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிப்பணிப்பாளர் எஸ். செல்வக்குமரன், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் வீ.எம். வேதாபரணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (14-3-24)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(புன்னாலைக்கட்டுவன்)

யாழ். வயாவிளான் மத்திய மகா வித்தியாலய நவோதய பாடசாலை நிறுவுனர் தினமும் ஆரம்பப் பிரிவிற்கான பரிசளிப்பு விழா, பாடசாலை கட்டட திறப்பு விழா மற்றும் யாழ். வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய திறப்பு விழாவும் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஏ.எஸ் நடராஜா மண்டபத்தில் அதிபர் கே. கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்புவிருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், வடமாகாண கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், தெல்லிப்பளை வலயக் கல்வி அலுவலர் எஸ். கைலாசநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். ஹாட்லி கல்லூரி முன்னாள் அதிபர் எம்.ஸ்ரீபதி, வயவன் முன்னாள் அதிபர் கே. ஆனந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (2-7-78)

## விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவினால் இவ்வாண்டுக்கான முறைசாரா கல்வி நடவடிக்கைகளுக்காக போதனாசிரியர்கள் மற்றும் பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் ஆகிய பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்களும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (2-3-29)




## கலந்துரையாடல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களின் தலைவர், செயலாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (2-3-24)

## கண்ணிவெடி விழிப்புணர்வு போட்டி முடிபுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தினால் கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான பொது அறிவுப்போட்டி அண்மையில் தென்மராட்சி மாணவரிடையே நடத்தப்பட்டது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவு-1

த.மதுரி (கைதடி முத்துக் குமாரசாமி ம.வி), இருவர் இரண்டாமிடம் சி.டனுஜன் (சாவகச்சேரி இந்து), உ.துவாரகன்(அல்லாரை அ.த.க).

பிரிவு-2

இ.விஷானி (சாவகச்சேரி இந்து), இருவர் இரண்டாம் இடம் சி.மேனகா (சாவகச்சேரி இந்து), ப.கஜானி (சாவகச்சேரி இந்து)

பிரிவு-3

க.கீர்த்திகா (கச்சாய் அ.த.க பாட சாலை), தே.வித்தியா (கச்சாய் அ.த.க பாடசாலை), கு.சயந்தன் (கச்சாய் அ.த.க பாடசாலை)

பிரிவு-4

கோ.சர்மிளா (சாவகச்சேரி இந்து), இருவர் இரண்டாமிடம் இ.வினுஜா (சாவகச்சேரி இந்து), சு.லக்ஷனா உசன் இராமநாதன்ம.வி.(2-3-29)

## ஆசிரிய இடமாற்றம்

வன்னி, தீவக வலயங்களுக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் பட்டியல் வலிகாமம் வலயக்கல்வி அலுவலத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இதனை இன்று வெள்ளிக்கிழமை முதல் வலிகாமம் கல்வி வலய இடமாற்ற சபைத் தலைவர் பார்வையிட முடியும் என ஏ.ஜெ.குரூஸ் அறிவித்துள்ளார்.

இவற்றுக்கான மேல் முறையீடுகளை எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் சமர்ப்பிக்கும் படி அவர் கேட்டுள்ளார். ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-14-7)

## திருவாசக முற்றோதல்

சுன்னாகம் மேற்கு பருத்திக்கலட்டி ஞானவைரவர் தேவஸ்தான திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது என ஞான வைரவர் தேவஸ்தான சபை அறிவித்துள்ளது. (2-7)











க.பொ.த (உ/த)-2011 பரீட்சையில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஆளுமை மேம்பாட்டுத் திட்டமிடல் செயலமர்வு அண்மையில் ரில்கோ ஹோட்டல் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இச்செயலமர்வில் வளவாளர்கள் அமர்ந்திருப்பதனையும் வேம்படி மகளிர் உயர்தர பெண்கள் பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி பொன்னம்பலம் உரையாற்றுவதனையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.






கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில், அண்மையில் முத்தமிழ் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலயக்கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா உரையாற்றுவதனையும் கலாசாலையின் இசைத்துறை மாணவிகள் இசை நிகழ்ச்சி வழங்குவதனையும் படங்களில் காணலாம். (படங்கள் :-அலுவலக செய்தியாளர்)

# பணி பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர் சப்ரகமுக பல்கலை விரிவுரையாளர்கள்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரதம மாணவ ஆலோசகர் மீது மாணவர்கள் நடத்திய தாக்குதலைக் கண்டிக்கும் வகையில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அனைத்து விரிவுரையாளர்களும் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழக பிரதம மாணவ ஆலோசகரின் வீடு மற்றும் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படும் வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என விரிவுரையாளர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஏ.டபிள்யூ. விஜயரத்ன கூறியுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து ஏற்கனவே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் மஹிந்த ரூபசிங்க கூறினார்.

விரிவுரையாளர்கள் கடமையிலிருந்து விலகிக்கொண்டுள்ள போதிலும் பல்கலைக்கழகத்தின் நாளாந்த நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் தற்போது இடம்பெற்று வரும் ஒழுக்காற்று விசாரணைகளைத் துரிதப்படுத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (2-14)

# வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த புத்திஜீவிகள் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தமிழ் புத்திஜீவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் பிரதேசத்தின் உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பௌதீக ரீதியான அபிவிருத்தி மிகவும் அவசியமானது எனவும் நாட்டின் ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளுக்கு நிகரான வகையில் வடக்கு- கிழக்கிலும் அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டுமென கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பீடபீடாதிபதி பேராசிரியர் என்.செல்வக்குமார் தெரிவித்தார்.

சேர். பொன்னம்பலம் அருணாச்சலம் நினைவுப் பேருரையில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (2-14)

# சிலை உடைப்பிற்கு கடுமையான கண்டனம்

## அகில இலங்கை இந்து மாமன்றம்

மட்டு.மாவட்டம் ஆரையம்பதி பிரதேச சபை பிரிவில் கல்முனைப் பிரதான வீதியில் ஆரையம்பதி பிரதேச சபையால் நிறுவப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் சிலை திங்கட்கிழமை 9ஆம்திகதி சேதப்படுத்தப் பட்டமையை அறிந்து மிகவும் வேதனையடைவதுடன் இந்து மக்களின் சார்பில் இந்நாட்டின் இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் அந்நிகழ்வைக் கடுமையாகக் கண்டிக்கின்றது.

சிக்காக்கோ மாநாட்டில் உலகின் சகல மதத்தலைவர்களையும் காத்து அன்புச் சகோதர, சகோதரிகளே! என விழித்து உரையாற்றி சர்வதேச ரீதியில் சனாதன தர்மமான எங்களின் இந்து மதத்தின் பெருமையை எல்லோருக்கும் உணர்த்தி எல்லோரின் பாராட்டையும் பெற்ற புகழ்மிக்க ஒரு மகானின் சிலைக்கு இப்படியான இழிவு நிகழ்வு நடந்தது பெரும் கவலையைத்தருகின்றது.

வேதனைகளையும், சோதனைகளையும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் துவேஷ உணர்வுகளால் வாடுகின்ற இந்த நாட்டில் மதத்து வேஷத்தைக் ஏற்படுத்தும் வகையிலான இந்த அழிவுச் செயலைச் சகலரும் கடுமையாகக் கண்டித்து மீண்டும் இப்படியான நிகழ்வுகள் நடக்காமல் பார்க்கவேண்டும் என வேண்டுகிறோம் என்று அக்கண்டனச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-14)

# கட்டணம் செலுத்தாதோருக்கு மின்சாரம் துண்டிக்கப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மின்சாரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் மின்கட்டணத்தை செலுத்தாத மின் பாவனையாளர்களது மின்சாரத் தொடர்பு சாவகச்சேரி மின்சாரசபையினால் துண்டிக்கப்பட்டு வருகிறது.

எனவே மின்சாரக்கட்டணங்களை உடன் செலுத்தி மின்சாரம் துண்டிக்கப்படுவதை தவிர்த்து கொள்ளுமாறு மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (2-3-29)

# இலங்கை விமான சேவை உலக தரப்படுத்தலில் பத்தாம் இடம்

(கொழும்பு)

இலங்கை விமான சேவை உலக தரப்படுத்தலில் முதல் 10 ஆம் இடத்திற்குள் வந்துள்ளதுடன் ஆசியாவில் 4 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளதாகவும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சினால் கடந்த வருடம் மேற்கொளளப்பட்ட திட்டங்கள் மற்றும் இவ்வருடம் மேற்படவுள்ள திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கும் நோக்கில் இச்சந்திப்பு இடம்பெற்றது. அவர் மேலும் கூறுகையில்,

இவ்விமான சேவை உலக தரப்படுத்தலில் முதல் 10 ஆம் இடத்திற்குள் வந்துள்ளது. எனினும் அது இன்னும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை ஆசியாவில் நான்காம் இடத்துக்கு வந்துள்ளமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கபட்டுள்ளது. கொரியா, சிங்கப்பூர் ஜப்பான் ஆகிய நாடுகள் ஆசியாவில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை வகிக்கின்றன. ஜப்பானுக்கு அடுத்ததாக இலங்கை உள்ளது. இந்த தரப்பட்டியலில் 34 நாடுகள் இடம்பெறுகின்றன. (2-14)

# எஸ்.பி.யை இரகசிய பொலிஸ் விசாரிக்க வேண்டும்; ஜே.வி.பி.மாற்றுக் குழு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மற்றும் தென்னிலங்கை இளைஞர்களை இணைத்துக்கொண்டு ஜே.வி.பி.யின் மாற்றுக் குழு நாட்டில் ஆயுதப் போராட்டம் ஒன்றிற்கு தயாராகி வருவதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க யாழ். பல்கலைக்கழகத்தில் கூறியிருப்பதானது மீண்டும் நாட்டில் இனவாதத்தை தூண்டிவிடுகின்றதும் தேசிய இன ஐக்கியத்திற்கு பங்கத்தை விளைவிப்பதுமான கருத்தென மாற்றுக்குழுவின் முக்கியஸ்தரும் காலி மாவட்ட எம்.பி.யு.மான அஜித்குமார தெரிவித்துள்ளார்.

அமைச்சர் எஸ்.பி.யின் கூற்றுக்கு தமது கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதாக வீரகேசரி இணையத்தளத்திற்கு கூறிய அவர், அமைச்சரின் இந்த பயங்கரமான கூற்று தொடர்பில் பொலிஸ்மா அதிபர் உடனடியாக தலையீடு செய்து அவரை இரகசிய பொலிஸ் விசாரணைக்குட்படுத்தி வாக்குமூலம் பெற வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2-14)

# இலங்கையில் மீனவர்களுமா?


(புதுக்கோட்டை)

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் 4பேர் உள்ளூர்ப் படகில் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். நடுக்கடலில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கையை சேர்ந்த மீனவர்கள் வந்த பைவர் படகானது இந்திய மீனவர்களின் படகுடன் உரசியது. இதனால் கோபமுற்ற இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் தமிழக மீனவர்கள் இருவரை விடுவித்து தமிழக கரைக்குச் செல்ல அனுமதித்தனர். ஏனைய இருவரையும் தங்களுடன் படகில் பிடித்து வைத்து இலங்கைக்கு கொண்டு வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (2-14)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்

### அமரர் வீரவாகு ஜெகவதனராஜா



அன்புடையீர்!


கடந்த 14.12.2011 ஆம் திகதி இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் 31 ஆம்நாள் நினைவுதினமும் அந்தியேட்டிக்கிரியையும் இன்று 13.01.2012 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் இடம்பெறவிருக்கும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். மேலும் அன்னாரின் மறைவின்போது சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

*பொக்கணைச் சந்தி,*
*உடுப்பிட்டி.*
*13.01.2012*

*தகவல்:- மனைவி கனகாம்புஜம்,*
*மகள் ஞானகலை.*

# கிலானிக்கு உயர் நீதிமன்றம் கண்டனம்; நேர்மையற்ற மனிதர் என குற்றச்சாட்டு



பாகிஸ்தானில் முஷாரப் ஜனாதிபதியாக இருந்த போது ஊழல் வழக்கில் சிக்கியிருந்தவர்கள் மீதான வழக்கை வாபஸ் பெறும் வகையில் அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. அதன் மூலம் தற்போதைய ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சியை சேர்ந்த 8 ஆயிரம் பேர் ஊழல் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர். அந்த சட்டம் காலாவதி ஆனதை தொடர்ந்து ஜனாதிபதி ஆசிப் சர்தாரி உள்ளிட்டவர்கள் மீதான வழக்கை மீண்டும் விசாரிக்கும் படி அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால், அதைபிரதமர்கிலானி கண்டுகொள்ளாமல் கிடப்பில் போட்டு விட்டார். இதற் கிடையே இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் 5 நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஊழல் வழக்கு விசாரணையை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்காத பிரதமர் யூசுப் ரசா கிலானிக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர்.

பிரதமர் கிலானி அரசியலமைப்பு சட்டப்படி கருத்து கொண்ட உறுதிமொழி மற்றும் குர் ஆனுக்கு எதிராக நடந்து கொள்கிறார். தனது கட்சிக்கும் அதன் தலைவருக்கும் (சர்தாரிக்கும்) ஆதரவாக செயற்படுகிறார். உயர்நீதிமன்றத்தின் உத்தரவை அவர் மதிக்கவில்லை. ஜனாதிபதி சர்தார்ரி உள்ளிட்டோர் மீதான வழக்கு விசாரணையை மீண்டும் தொடங்க வில்லை.

சுவிட்சர்லாந்து வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்பு பணம் குறித்த விபரங்களை கேட்டு அறிய கடிதம் எதுவும் எழுதவில்லை. கிலானி நேர்மையற்ற பிரதமர் பதவிக்கான மதிப்பிற்குரிய மனிதராக உள்ளார். அவர் அரசியல் சட்டப்படி எடுத்துக் கொண்ட உறுதிமொழியையும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவையும் மதிக்கவில்லை. இன்னும் ஒரு வாரத்துக்குள் சர்தாரி மீதான ஊழல் வழக்கு விசாரணையை தொடங்க வேண்டும்.

இல்லாவிடில் பிரதமர் பதவியில் இருந்து கிலானியும் ஜனாதிபதி பதவியிலிருந்து சர்தாரியும் நீக்கப்படுவார்கள் என எச்சரிக்கை விடுத்தனர். (2-14)

## ஏவுகணை தாக்குதல்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையினர் முகாமிட்டு தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி வந்திருக்கின்றனர். இந்த தாக்குதலின் போது பாகிஸ்தானுக்குள்ளும் சில சமயங்களில் வெடி குண்டுகள் வீசப்படுகின்றன. இதுபோன்று பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பழங்குடி இன பகுதியில் அமெரிக்க படையினர் நேற்று ஏவுகணை தாக்குதல் நடத்தினர்.

அப்போது பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் மாகாணத்தில் உள்ள மிரான்சா நகரில் ஒரு வீட்டின் மீது ஏவுகணைகள் விழுந்தன. மொத்தம் இரண்டு ஏவுகணை குண்டுகள் விழுந்ததில் வீடு தீப்பிடித்து எரிந்தது. வீட்டுக்குள் இருந்த 4 பேர் உயிரிழந்தனர். (2-14)

## வேலை தேடி அந்தாட்டிக்கா செல்லும் பிரித்தானிய இளைஞர்கள்




(லண்டன்)

பிரிட்டன் நாட்டில் தற்பொழுது வேலையி ல்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் வேலை தேடி அந்தாட்டிக்காவுக்கு கூட செல்ல அந்நாட்டு இளைஞர்கள் தயாராக உள்ளனர். கடந்தாண்டில் பிரிட்டனில் நடை பெற்ற கலவரத்திற்கு வேலையின்மையும் ஒரு முக்கிய காரணம் என அரசின் அறிக்கை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் அந்தாட்டிக்காவில் நடந்து வரும் பல்வேறு பணிகளுக்காக பிரிட்டிஷ் அந்தாட்டிக்கா சர்வே என்ற அரசு சார் நிறுவ னம் வேலைக்கு ஆள் எடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. சமீபத்தில் பிளம்பர், எலக்ட்ரீ ஷியன், சமையல் நிபுணர்கள், மர வேலை பார்ப்போர் என மொத்தம் 36 பணியிடங் களுக்கு விளம்பரம் அளித்திருந்தது.

இந்த 36 பணியிடங்களுக்காக பிரிட்டன் முழுவதிலும் இருந்து 3 ஆயிரம்பேர் விண்ணப்பித்திருந்தனர். பிரிட்டனில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தம், அதன் விளைவாக வேலையில்லா திண்டாட்டம் ஆகியவை தான் இவ்வளவு விண்ணப்பங்கள் வரக் காரணம் என நிபுணர்கள் கருதுகின்றனர். (14)

## கெப்லர் 16-பிக்கு இரு சூரியன்கள்



அமெரிக்காவின் நாசா மையம் விண்வெளியில் ஆய்வு நடத்த கெப்லர் டெலஸ்கோப்பை நிறுவியுள்ளது. அதன் மூலம் விண்வெளியில் புதிதாக ஒரு கிரகம் இருப்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

பூமியைப் போன்றுள்ள அந்த கிரகத்துக்கு கெப்லர் 16-பி என பெயரிட்டிருந்தனர். இது மனித உயிர்கள் வாழும் தன்மை கொண்டது என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

தற்போது டெக்சாஸ் பல்கலைக்கழக விண்வெளி விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் பூமியைப் போன்ற கெப்லர் 16-பி கிரகத்தில் 2 சூரியன்கள் உள்ளன. அவை அந்த கிரகத்தின் மேற்பரப்பில் இருக்கும் தண்ணீரை மிக வெப்பமாகவோ அல்லது மிகுந்த குளிராகவோ இருக்க செய்கிறது என கண்டுபிடித்துள்ளனர். (2-14)

## தெற்காசிய நாடுகளில் இராணுவ செலவு அதிகரிப்பு

தெற்காசிய நாடுகளில் பத்தாண்டுகளில் இராணுவத்திற்கான செலவு 50 சதவீதம் அதிகரித்திருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது, கடந்த 1995 முதல் 2005 வரையிலான 10 ஆண்டுகளில் தெற்காசியாவில் உள்ள நாடுகளின் செலவீனங்களில் இராணுவத்திற்கான செலவு மட்டும் 50 சதவீதம் அதிகரித்துள்ளது. உலகளவில் இராணுவச் செலவில் 1995 இல் 1.8 சதவீதமாக இருந்த தெற்காசியாவின் பங்கு 2005 இல் 2.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே காலகட்டத்தில் அந்நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியோ 2.7 சதவீதத்தில் இருந்து 2.4 சதவீதமாக குறைந்துள்ளது. மேலும் ஆயுத ஏற்றுமதி மிகக் குறைந்த அளவில் உள்ளது. ஆனால், இறக்குமதி ஒரு பில்லியன் டொலரில் இருந்து 4 பில்லியன் டொலராகவும் அதிகரித்துள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-14)




## அணு விஞ்ஞானி மீது தாக்குதல் அமெரிக்கா கண்டனம்

(ஈரான்)

ஈரானில் அணு விஞ்ஞானி மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்க அரசாங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஈரானின் தலைநகரின் வட பகுதியில் அணு விஞ்ஞானி முஸ்தபா அஹமதி ரொசான் கார்க் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.


இந்தத் தாக்குதலுக்கும் அமெரிக்காவிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என அமெரிக்க தேசியப் பாதுகாப்பு பேரவைப் பேச்சாளர் டொமி வியட்டர் தெரிவித்துள்ளார்.

நட்னாஸ் யூரேனிய அணு ஆலையில் கடமையாற்றி வந்த இவரும் இவரது சாரதியும் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். அண்மைக்காலமாக ஈரானின் முக்கிய அணு விஞ்ஞானிகள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களுடன் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் தொடர்பு இருப்பதாக ஈரான் குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை இஸ்ரேலும் அமெரிக்காவும் நிராகரித்துள்ளன. சகல விதமான வன்முறைகளும் வெறுக்கப்படவேண்டியவை எனவும் இவ்வாறான குற்றச் செயல்களை அனுமதிக்க முடியாது எனவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் குண்டுத் தாக்குதல்களின் மூலம் ஈரானின் அணு ஆய்வுகளை தடுத்து நிறுத்திவிட முடியாது என ஈரான் குறிப்பிட்டுள்ளது. (2-14)



சீனா விஜயம் மேற்கொண்ட வந்திருந்த அமெரிக்க நிதி அமைச்சர் திமோதி கீத்னர் (இடது) அந்நாட்டு பிரதமர் வென்ஜியாபோவை தலைநகர் பீஜிங்கில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# மேர்வினுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## மைத்திரிபால தெரிவிப்பு

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைய கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

களனி பிரதேசசபைத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களினால் அமைச்சருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளில் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (2-14)

# பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில் வழங்கல்; சாத்தியமில்லை

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக அரசாங்கத்தினால் தொழில்களை வழங்க முடியாது என பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

என்கோ 2012 கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே பிரதமர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக கருத்துரைக்கையில், சுமார் இருபதாயிரம் மாணவர்கள் வருடாந்தம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவதாகவும் அதே அளவிலான மாணவர்களுக்கு தொழில்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான இயலுமை இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அவர்களுக்கான ஜீவனோபாய தொழில் மார்க்கங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளதாகவும் அவ்வாறு இல்லாவிட்டால் அவர்கள் கொடிகளை ஏந்தியவாறு தொழில் வழங்கக்கோரி வலியுறுத்தி ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதற்கான சூழல் உருவாகும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அரசியல் துறையின் உள்ள பலர் தமது அதிகாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக அத்தகைய நபர்களை இணைத்துக் கொண்டு பேரணிகளை நடத்துவதற்கு முனைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-14)

# கனடாவில் தேடப்படும் குற்றவாளிகளில் இலங்கை நபர் கைது செய்யப்பட்டார்

கனடாவில் தேடப்பட்டு வரும் 90 முக்கிய குற்றவாளிகளில் 15 ஆவது நபராக உள்ள இலங்கையைச் சேர்ந்த செல்லத்தம்பி பாஸ்கரன் நேற்று முன்தினம் கனேடிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ரொரண்டோ- ஒன்றாரியா பகுதியில் வசித்து வந்த இவர் தேசிய பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டு தேடப்பட்டு வந்துள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்டுள்ள இவர் மோசமான தாக்குதல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டுள்ளவர் என கனேடிய குடிவரவு எல்லை முகவர் நிலைய தலைவர் லக் போர் டெலன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இவரை கன்டாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கனேடிய குடிவரவு எல்லை முகவர் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடாவில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட இவர் இலங்கைக்கு திரும்புமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் மறைவாக இருந்து வந்துள்ளார். (2-14)

# டெங்கு நோய்த்தாக்கத்தால் பாடசாலை மூடப்பட்டது

(கொழும்பு)

டெங்கு நோய்த்தாக்கம் இனங்காணப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பணிமனையின் பணிப்பின் பேரில் நேற்று காலை காத்தான்குடி அல்-அமீன் மகளிர் வித்தியாலயம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது.

ஆட்கொல்லி டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக மட்டு. மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் தலைமையில் பரிசோதிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமையவே நேற்று காலை மேற்படி வித்தியாலயத்திலும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பெருமளவான நுளம்புகள் மற்றும் நுளம்புக் குடம்பிகள் பாடசாலை வளவில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பாடசாலை மூடப்பட்டு மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். பாடசாலையை உடனடியாக மூடுமாறு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எம்.சதுர்முகம் அதிபருக்கு பணிப்புரை விடுத்தார். (2-14)

# விபசார விடுதி சுற்றி வளைப்பு

உபபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருடைய மனைவியெனக் கூறப்படும் பெண் ஒருவரால் அனுராதபுரம் நகரில் நடத்திச் செல்லப்பட்ட விபசார விடுதியை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர்.

இதன்போது விபசார விடுதியை நடத்திச் சென்ற பெண்ணும் அங்கு தங்கியிருந்த இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டதாக அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுராதபுரம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மூன்று பெண்களும் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (2-14)

# கிருஷ்ணாவின் நிகழ்ச்சி நிரலில் த.தே.கூட்டமைப்பிற்கு இடமில்லை?

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்திய விவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவின் பயண நிகழ்ச்சி நிரலில் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதாக குறிப்புக்கள் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள இப்பயண நிகழ்ச்சி நிரலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்புக்கள் பற்றி எந்த குறிப்புக்களும் இடம்பெறவில்லை எனவும் முதலாவது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையே சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கொழும்பில் தங்கியிருக்கும் போது இலங்கையில் குறைந்தது ஆறு இருதரப்பு உடன்பாடுகளில் கையெழுத்திடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-14)

# வெள்ளைக்கொடி மனு விசாரணைக்கு நீதவான் பெயர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

வெள்ளைக்கொடி வழக்கு தொடர்பான மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்யும் நீதவான்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சர்ச்சைக்குரிய வெள்ளைக் கொடி வழக்கு தொடர்பில் அளிக்கப்பட்ட தீர்ப்பை சவாலுக்கு விடும் வகையில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் சரத் பொன்சேகா குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டதுடன் அவருக்கு மூன்றாண்டு கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற நீதவான்கள் ஐவர் அடங்கிய நீதவான் குழாமொன்று மேன்முறையீட்டு மனுவை விசாரணை செய்யவுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க, நிமால் காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன், பீ.ஏ.ரத்நாயக்க மற்றும் பிரியசாத் ஆகிய நீதவான்கள் இந்த வழக்கை விசாரண செய்கின்றனர்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி மனு தொடர்பான விசாரணைகள் நடத்தப்படவுள்ளன. சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகாவினால் கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதி மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. (2-14)

# கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் அற்புதமான அறப்பணிகள்

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் கல்வி சமூகப் பணிக்குழுவினர் இரண்டாம் கட்டமாக மேலும் 33 பிள்ளைகளுக்கு தை மாதம் தொடக்கம் நிதியுதவி வழங்கத் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பான விழா திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிதி உதவி வழங்கி பெரியோர்களும் உதவி பெறும் பிள்ளைகளும் உறவினர்களும் பிள்ளைகளின் விண்ணப்பங்களைப் பரிசீலித்த சமூக ஆர்வலர்களும் பரிபாலன சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் தொண்டர்களும் இவ்விழாவில் பங்கு பற்றுவார்கள்.

இதேவேளை, இவ்வுதவி பெறும் பிள்ளைகள் அவ்வுதவியினை துஷ்பிரயோகம் செய்யாத வண்ணம் கல்வி சமூகப் பணிச் சபையினால் இடையிடையே கண்காணிக்கப்படுவார்கள். மாசி மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் இறுதிச் சனிக்கிழமையன்று காலை 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரை திருகோணமலை நகராட்சிமன்ற வளாகத்திலுள்ள கோணேஸ்வர ஆலய பணிமனையில் உதவித் தொகையினை பெற்றுக் கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதென பரிபாலன சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பெற்றோரை, உறவினர்களை, உறைவிடங்களையும் இழந்து நிர்க்கதியான குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் கல்வி சமூகப் பணிச்சபை 2011 தை மாதம் தொடக்கம் 47 பிள்ளைகளுக்கு மாதாந்தம் ரூபா ஆயிரத்து 500 வீதம் நிதி உதவி வழங்கி வருகிறது. அதன் இரண்டாம் கட்டமாக மேற்படி உதவித்திட்டம் தொடர்கிறது.

இன்னமும் பல குழந்தைகள் விண்ணப்பங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களின் கல்விக்காக தாராள மனம் படைத்த மக்கள் உதவவேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (2-14)

# சோமாலியாவிற்கு நிவாரணமாக செல்லவுள்ளது மேலும் பத்தாயிரம் மெற்றிக்தொன் அரிசி

சோமாலியாவிற்கு மேலும் பத்தாயிரம் மெற்றிக்தொன் அரிசியை நிவாரணமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒரு மாத காலத்திற்குள் அரிசியை அனுப்பி வைக்க உத்தேசித்துள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளில் உள்ள நெல்லினால் அரிசியை உற்பத்தி செய்து அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான களஞ்சியசாலைகளில் தற்போது ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் உள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (2-14)

# இனப்பிரச்சினைக்கு தீர்வை வலியுறுத்தும் உரிமை தெற்காசிய தலைவன் இந்தியாவுக்குண்டு

## பேராசிரியர் சுமனசிறி லியனகே வலியுறுத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டப் பொதி தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் டில்லிக்கு வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டிய கடப்பாடு தெற்காசியப் பிராந்தியத்தின் தலைவன் என்ற அடிப்படையில் இந்தியாவிற்கு உள்ளது. இந்தியா அவ்வாறு செய்யும் பட்சத்தில் ஆமை வேகத்தில் நகரும் அரசியல் தீர்வுப் பயணம் துரிதமடையக்கூடும் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் பொருளாதார விவகாரங்களைக் கையாளும் சிரேஷ்ட பேராசியர்களுள் ஒருவரான சுமனசிறி லியனகே தெரிவித்துள்ளார்.

அதிகர்ரப்பகிர்விற்கு அரசுக்குள் இருக்கும் இனவாதிகள் சிலர் கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றனர். அவர்களின் கருத்துக்கமைய அரசு செயற்படுமானால் தேசிய அரசியல் என்ற கோட்பாட்டை மீறி அது இனவாத அரசியல் போக்கையே கடைப்பிடிக்கின்றது என்றே அர்த்தம் என்றும் பேராசிரியர் சுட்டிக் காட்டினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் பொருட்டு அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு நடைபெற்று வருகின்றது. இந்தப் பேச்சில் இரு தரப்புக்குமிடையில் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். அவ்வாறு எட்டப்படும் இணக்கப்பாட்டையே தெரிவுக்குழு பரிசீலிக்க வேண்டும். இதுவே யதார்த்த பூர்வமான அரசியலாகும்.

தீர்வு விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்கிடையில் இரட்டை நிலைப்பாடு இருக்கக் கூடாது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் தீர்வு என்றவிடயம் சாத்தியப்படாது. புரிந்துணர்வு, இதயசுத்தி ஆகிய விடயங்கள் தீர்வுப் பேச்சில் முதன்மை வகிக்கும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொதி தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் இந்தியாவிற்கு உறுதி மொழிகளை வழங்கியுள்ளனர். 13 ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று தீர்வு வழங்குவோம் என ஜனாதிபதியே கூறியுள்ளார்.

எனவே, டில்லிக்கு இவர்கள் வழங்கிய உறுதி மொழிகளை நடைமுறைப்படுத்துவது இலங்கை அரசை வலியுறுத்த வேண்டிய கடப்பாடு தெற்காசியப் பிராந்தியத்தின் தலைவர் என்ற அடிப்படையில் இந்தியாவிற்கு உள்ளது. அந்நாடு அவ்வாறு செய்யுமானால் ஆமை வேகத்தில் நகரும் அரசியல் பயணம் சாதகமானதொரு திசையை நோக்கிப் பயணிக்கக் கூடும் எனவும் லியனகே கூறியுள்ளார். (அ-2)

# நூல் வெளியீடு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் கலை இலக்கிய ஆன்மீகஏடு சக்கரம் இரண்டாம் பாகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பல் 11 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் அறங்காவலர் சபை தலைவர் இ. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டுரையினை சைவப் புலவர் பொன் சுகந்தனும் மதிப்பீட்டுரையை அகில இலங்கை சைவநற்பணி கழக செயலாளர் கு.இந்திராசா ஆற்றுவார்கள். (2-7-14-35)

# புலிச்சின்ன தபால் முத்திரைகளை பிரான்ஸ் தடை செய்ய வேண்டும்

## இலங்கை முத்திரை சங்கம்

பிரான்சில் வெளியிடப்பட்டுள்ள புலிகளின் உருவப்படங்கள் அடங்கிய தபால் முத்திரைகள் தடை செய்யப்பட வேண்டுமென இலங்கை முத்திரை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரான்சின் லா போஸ்ட் என்னும் அந்த நாட்டு தபால் திணைக்களம் விடுதலைப்புலிகளின் சின்னங்கள் அடங்கிய நான்கு தபால் முத்திரைகளை வெளியிட்டுள்ளது.

இந்தத் தபால் முத்திரைகளை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென இலங்கை முத்திரை சங்கம் சர்வதேச தபால் சங்கத்திடம் கோரவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் குறித்த முத்திரைகளை பிரான்ஸ் அரசாங்கம் இது வரையில் உத்தியோகபூர்வமாக தடை செய்யவில்லை என இச்சங்கத்தின் பொருளாளர் துமிந்த கொடஹேவா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பிரான்ஸ் தூதுவர் மன்னிப்பு கோரியுள்ளாரே தவிர முத்திரைகளை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

முத்திரைகள் தடை செய்யப்படாவிட்டால் சர்வதேச முத்திரைகளின் விலையை நிர்ணயம் செய்யும் ஸ்டென்லி கிபன் பட்டியலில் இந்த முத்திரைகள் இடம்பெறக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இதன் மூலம் பயங்கரவாத அமைப்பு ஒன்றை போஷிக்கும் வகையில் எந்தவொரு நாட்டிலும் முத்திரைகள் அச்சிடப்படக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (2-14)

# இயற்கை அனர்த்த பாதுகாப்பிற்கு விசேட முகாமைத்துவ திட்டம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களை இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்கவும் காலநிலை மாற்றத்தை சமப்படுத்தும் சுற்றாடலை பாதுகாக்கவும் பாதுகாப்பு அமைச்சு விசேட முகாமைத்துவ திட்டமொன்றினை அமுல்படுத்தவுள்ளது.

பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய இந்த விசேட முகாமைத்துவ திட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதுடன் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் கரையோரம் பேணல் திணைக்களம் இந்த விசேட முகாமைத்துவ திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக இத்திட்டத்தின் மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் சீரான அமுலாக்கம் பற்றி இம்மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற விசேட திட்டத்தில் அறிவூட்டல் செய்யப்பட்டது.

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் இம்மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், உள்ளூர் திணைக்களங்களின் தலைவர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

இந்த விசேட திட்டத்தினை அமுல்படுத்த மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.அருமைநாயகம் தலைமையில் விசேட இணைப்புக் குழுவொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட திட்டத்திற்கு முதற்கட்ட நிதியாக 4 கோடியே 10 இலட்சம் ரூபாவை பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது. 5 வருடங்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தில் வாகரை பனிச்சங்கேணி வாவி பிரதேசத்தில் நீடித்து நிலைக்கக்கூடிய வளங்கள் பாதுகாக்கப்படவுள்ளன. இதில் கண்டல் தாவரங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன் இப்பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு கற்கை நிலையமொன்றும் உருவாக்கப்படவுள்ளது. (2-14)

# தங்காலை படுகொலை விசாரணைக்கு ரஷ்யா, பிரித்தானியா பாராட்டு

(கொழும்பு)

தமது பிரஜைகள் மீது தங்காலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் இலங்கை மேற்கொண்டு வரும் விசாரணைகளை ரஷ்யாவும் பிரித்தானியாவும் பாராட்டியுள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தங்காலையில் கிறிஸ்மஸ் தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலின் போது பிரித்தானிய பிரஜையான சர்வதேச செஞ்சிலுவை சங்க பணிப்பாளர் குரம் சகீம் என்பவர் கொல்லப்பட்டார்.

அவருடைய நண்பியான ரஷ்யாவை சேர்ந்த விக்டோறியா அலெக்ரோவனா காயங்களுக்கு உள்ளானார்.

அவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந் நிலையில் விக்டோரியா பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளமையை அமைச்சர் யாப்பா குற்றம் சுமத்தியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு அந்த அதிகாரம் இல்லையென்றும் சட்ட வைத்திய அதிகாரி ஒருவருக்கே அந்த அதிகாரம் உள்ளதாகவும் அவர் கூறினார். (2-14)

# அரசாங்கத்தின் குற்றச்சாட்டு தவறு; சுதந்திர ஊடக மையம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஜி.எஸ்.பிளஸ் வரிச்சலுகை கிடைக்கக் கூடாது என்பதற்காக பிரசாரம் மேற்கொண்டதாக அரசாங்கம் வெளியிட்ட குற்றச்சாட்டுக்கு சுதந்திர ஊடக மையம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

எனினும் ஜி.எஸ்.பிளஸ் கிடைக்க வேண்டுமானால் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பிலான கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என்றே தாம் பிரசாரம் செய்ததாக சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுதந்திர ஊடகங்களுக்கு எதிராக மக்களை திருப்புவதை நோக்காகக் கொண்டதாகும் என இயக்கத்தின் அமைப்பாளர் சுனில் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாட்டை விட்டு வெளியேறியுள்ள தமது இயக்கத்தின் உறுப்பினர்களான சுனந்த தேசப்பிரிய, போதல ஜெயந்த மற்றும் உவிடுகுருகுலசூரிய ஆகியோர் தம்முடைய கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடும் உரிமைகள் கொண்டுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜி.எஸ்.பிளஸ் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பில் உரியமுறையில் செயற்படுத்த வேண்டியது அதன் கடமையாகும் என்று ஜெயசேகர சுட்டிக்காட்டியுள்ளார். (2-14)

# அரசியல்வாதிகளின் பாதுகாப்பிற்கு பாதாள உலகக் குழுவினர்?

(கொழும்பு)

இலங்கை அரசியல் வாதிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் இணைப்புச் செயலாளர்கள், பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் என புலனாய்வுப் பிரிவினர் தயாரித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய அரசியல்வாதிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக கடமையாற்றி வரும் பாதாள உலகக்குழு உறுப்பினர்களை விரைவில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அமைச்சு பாதுகாப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றைத் தவிர வேறு தனிப்பட்ட நபர்களை அரசியல் வாதிகள் தங்களது பாதுகாப்பு கடமைகளுக்காக ஈடுபடுத்தமுடியாது என பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

வெளி நபர்கள் அரசியல் வாதிகளின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தால் தராதரம் பாராது அவர்களை கைது செய்யுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸார் அமைச்சுப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவத்தினரைத் தவிர வேறு தரப்பினர் அரசியல் வாதிகளை ஆயுதமேந்தி பாதுகாக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-14)

# குருவைத்தேடி...



ஆன்மீகம் 03

நீங்கள் குருவைத்தேடி அலைந்து கொண்டிருந்தால் எப்போதுமே தவறான ஒருவரைத்தான் அடையாளம் கண்டுகொள்வீர்கள். ஏனென்றால், நீங்கள் தேடுவது எப்போதுமே உங்களுக்கு எது சௌகரியமானதோ, உங்களுக்கு எது விருப்பமானதோ அதைத்தான் தேடுவீர்கள். அப்படி இருந்தால் அவர் சரியான குரு இல்லை. உங்கள் குருவின் முன்னிலையில் நீங்கள் இருக்கும் போது நீங்கள் அவரை நோக்கி ஈர்க்கப்படுவதை உணர்வீர்கள். அதேநேரம், மிக அசௌகரியமான ஒரு உணர்வையும் நீங்கள் அனுபவிப்பீர்கள். அவரைவிட்டு விலகிஓட நினைப்பீர்கள். ஆனால், உங்களால் அப்படிப்போக முடியாது. ஒரு குரு என்பவர், ஒரு அச்சுறுத்தலாகத்தான் இருக்கிறார். அவர் உங்களது குறுகிய எல்லையிலிருந்து, எல்லையில்லாத பிரபஞ்சத்தை நோக்கி உங்களை இட்டுச் செல்பவர். எனவே, தற்போது நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ அது தொடர்ந்தும் அவரது முன்னிலையில் இருக்கும் போது, அச்சுறுத்தலுக்கு ஆட்படுகிறது. அப்படி இல்லாவிட்டால், அவர் உங்கள் குருவாக இருக்க முடியாது.

கேள்வி: சத்குரு, வாழ்க்கை என்பது பிரச்சினைகள் நிறைந்ததாக நான் நம்புகிறேன். ஒரு பிரச்சினையைத் தீர்க்க முயற்சித்தால் இன்னொன்று தோன்றுகிறது. சில நேரங்களில் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட சூழலில் எந்த விதமான ஆன்மீகப்பாதை-தொடக்க நிலை, நடுநிலை, உச்சநிலை- சரியானதாக, பொருதமானதாக இருக்கும்? தயவுசெய்து சொல்லுங்கள்.

சத்குரு: உண்மையில் வாழ்க்கையில் எந்தப்பிரச்சினையுமே இல்லை. வாழ்க்கை என்பது சூழ்நிலைகளை மட்டுமே கொண்டிருக்கிறது. சில சூழ்நிலைகளை நீங்கள் நன்றாக கையாளுகிறீர்கள். சில சூழ்நிலைகளை உங்களால் நன்றாக கையாள முடிவதில்லை. உங்களால் கையாள முடியாத சூழ்நிலையை நீங்கள் பிரச்சினை என்கிறீர்கள். உங்களுக்கு எது பிரச்சினையாக இருக்கிறதோ, அது எனக்கு பிரச்சினையாக இல்லாமல் இருக்கலாம். இன்றைய இரவு உணவு உங்களுக்கு வராவிட்டால் அது உங்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கலாம். ஆனால், அது எனக்குப் பிரச்சினையாக இருக்காது. அதை நான் நல்ல விதமாகப் பயன்படுத்திக் கொள்வேன். எனவே, உண்மையில் பிரச்சினைகளே கிடையாது. சூழ்நிலைகள் மட்டுமே உள்ளன.

உண்மையிலேயே உங்கள் பிரச்சினை என்னவென்றால், நீங்கள் உங்களை சூப்பர் மேனாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சூழ்நிலையையும் கையாளும் திறமை கொண்டவராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அப்படி நடக்காது. சில சூழ்நிலைகளை நீங்கள் நன்றாகக் கையாள்வீர்கள். சில சூழ்நிலைகளை கோட்டை விடுவீர்கள். சில சூழ்நிலைகளை சுமாராகக் கையாள்வீர்கள். வாழ்க்கை அப்படித்தான் இருக்கும். ஆனால், இப்போது அதை நீங்கள் பிரச்சினை என்கிறீர்கள். ஏனென்றால், அதைக் கையாளுவதற்கான திறன் உங்களிடம் இல்லை. எந்த விடயங்களை உங்களால் கையாள முடியுமோ அது உங்களுக்கு பிரச்சினையாக இருப்பதில்லை. இல்லையா? எனவே உண்மையிலேயே பிரச்சினை என்று எதுவுமில்லை. ஒரே பிரச்சினைதான் இருக்கிறது. அது நீங்கள்தான். இந்த ஒரு பிரச்சினையை நீங்கள் சரி செய்துவிட்டால் உண்மையில் உலகில் எந்தப்பிரச்சினையுமே இருக்காது. இது மட்டுமே பிரச்சினை.

ஆன்மீகத்தில் நடையிட நடுநிலைப் பாதை, உச்சகட்டப் பாதை இப்படி ஏதேனும் இருக்கிறதா? அப்படி எல்லாம் எதுவும் இல்லை. ஒரு மனிதருக்கு எது மிகவும் பொருத்தமானதாக இருக்கிறதோ அதைத்தான் அவர் தேர்ந்தெடுக்க வேண்டும். இதில் குறிப்பிட்ட பாதை என்றெல்லாம் எதுவுமில்லை. ஒவ்வொருவரும் அவரவருக்கு பொருத்தமான பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அதனால்தான் இந்த பாரம்பரியத்தில் வாழ்கின்ற குருவிற்கான தேவை மிகவும் அதிகமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவர் சரியான கலவையை உங்களுக்கு தேர்ந்தெடுத்துத் தருகிறார். நீங்கள் தேர்ந்தெடுத்தால் உங்களுக்கு எது மிகவும் சௌகரியமாக இருக்கிறதோ அதைத்தான் தேர்ந்தெடுக்கிறீர்கள். எது உங்களுக்கு சரியான பாதையோ அதைத் தேர்ந்தெடுக்க மாட்டீர்கள். ஏனென்றால் ஆன்மீகம் என்பது தற்போது நீங்கள் எப்படி உள்ளீர்களோ அதை அழித்துவிடுவது தான். தற்போது நீங்கள்என்று எதைக் கருதிக்கொண்டிருக்கிறீர்களோ அந்தக் குறுகிய எல்லையை தகர்த்து எறிவதுதான். அப்போதுதான் அதைவிட மிகப் பெரிதான ஒன்று உங்களுக்குள் நிகழும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்


# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 08


போலந்து ஜேர்மனியிடம் வீழ்ச்சியடைந்தபின் [illegible] தளபதியும் ஜேர்மனிய[illegible]

## யுத்தத்தின் முன்னணைப் பொழுதில்

இவ்வாறாக பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்திய, சோவியத் எதிர்ப்புக் கொள்கை பாசிச ஜேர்மனிக்கு மட்டுமின்றி இராணுவ வெறி கொண்ட ஜப்பானுக்கும் சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்பளித்தது; சோவியத் யூனியனுக்கு எதிராக இவை ஆக்கிரமிப்பில் இறங்குவதற்கு ஊக்கமளித்தது. 1927 ஆம் ஆண்டிலேயே தனாக்கா நினைவறிக்கை என்றழைக்கப்பட்டதில் சீனா, இந்தியா மற்ற ஆசிய நாடுகளை வெல்லும் ஜப்பானியத் திட்டங்கள் இடம் பெற்றிருந்தன. சீனாவைக் கைப்பற்றுவதற்கு ஜப்பான் முதலில் மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும் வெல்லவேண்டும். உலகை வெற்றிகொள்ள வேண்டுமானால், நாம் முதலில் சீனாவை வெல்லவேண்டும். நாம் சீனாவை வென்றால், மற்ற பின்தங்கிய சிறிய ஆசிய நாடுகளும் இந்தியாவும் தென்கடலோர நாடுகளும் நம்மைக் கண்டு அஞ்சி நடுங்கி நம்மிடம் சரணடையும். உலகம் அப்போது கிழக்கு ஆசியா நம்முடையது என்பதைப் புரிந்து கொள்ளும். நம்முடைய உரிமைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்க அதற்குத் தைரியம் இருக்காது... சீனாவின் எல்லா மூல ஊற்றுக்களையும் கைப்பற்றிய பின் இந்தியாவையும் தென் கடலோர நாடுகளையும் அதற்குப்பின் ஆசியா மைனரையும் மத்திய ஆசியாவையும் இறுதியாக ஐரோப்பாவையும் கைப்பற்ற நாம் செல்லுவோம். என்று பசுபிக் சமுத்திரத்தின் யுத்தவரலாறு தொகுதி-1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.


சீனாவின் சங்க[illegible] சீனர்களின் இயந்திரத் துப்[illegible]களின் [illegible]

இராணுவத்தை சீரமைத்து மறு ஆயுதந் தரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவ வெறி கொண்ட ஜப்பான் தனது ஆக்கிரமிப்புத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் இறங்கியது. 1931 இல் அது வடக்கு, கிழக்கு சீனாவையும் (இங்கே மஞ்ஜோவு-கோபொம்மை அரசு தோற்றுவிக்கப் பட்டது.) பின் உள்மங்கோலியாவின் பகுதியையும் கைப்பற்றியது.

மஞ்சூரியாவைத் துண்டந் துண்டமாக்கிய ஜப்பானிய இராணுவ வெறியர்கள் சீனா முழுவதையும் கைப்பறறவும் சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்தைக் கட்டவிழ்த்து தயாராகத் தொடங்கினார்கள். ஜப்பானிலும் மஞ்சூரியாவிலும் இருந்த தொழில் நிலையங்களில் இரும்பு, எஃகு உற்பத்தி, நிலக்கரி எடுத்தல், செயற்கை எண்ணெய் உற்பத்தி முதலியன அதிகமாயின. இராணுவத் தொழிற்சாலைகள் ஆயுத உற்பத்தியையும் இராணுவ இயந்திரங்களின் உற்பத்தியையும் அதிகப்படுத்தின. சோவியத், மங்கோலிய, சீன எல்லைகளுக்கருகே ஆக்கிரமிப்பாளர்கள் விமானத் தளங்களைக் கட்டுவதிலும் இருப்புப் பாதைகளை அமைப்பதிலும் சாலைகளைப் போடுவதிலும் படையிருப்பிடங்கள், இராணுவக் கிடங்குகளைக் கட்டுவதிலும் தீவிரமாக இறங்கினர். 1934ஆம் ஆண்டு வாக்கில் மஞ்சூரியாவிலும் கொரியாவிலும் சுமார் 40 விமானத் தளங்களும் 50 இறங்குமிடங்களும் கட்டப் பட்டன. இதுதவிர மஞ்சூரியாவில் கிட்டத்தட்ட ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்திற்கு போர்த்தந்திர முக்கியத்துவமுடைய இருப்புப் பாதைகள் இடப்பட்டன.


மொங்கோலியாவில் ஜப்பானை எதிர்த்து சோவியத்படைகள்

அதேநேரத்தில் சோவியத் யூனியனுக்கு எதிராக மஞ்சூரியாவில் வைக்கப்பட்டிருந்த குவாண்டுங் இராணுவத்தின் எண்ணிக்கையையும் பலத்தையும் ஜப்பான் அரசாங்கம் அதிகப் படுத்தியது. 1932ஆம் ஆண்டு ஜனவரி1 ஆம் திகதி குவாண்டுங் இராணுவத்தில் 50 ஆயிரம்பேர் இருந்தனர் என்றால்- இது மொத்த ஜப்பானிய இராணுவத்தில் 20 சதவிகிதமாகும். 1937 ஆம் ஆண்டு 1 ஆம் திகதிக்கு இது 5 மடங்கிற்கும் கூடுதலாகப் பெருகியது, இதன்வசம் 439 டாங்கிகளும் ஆயிரத்து 193 பீரங்கிகளும் 500 விமானங்களும் இருந்தன.

வி.அ.மத்சுலேன்கோ

(தொடரும்)

# தங்க நகையை மீட்டுக் கொடுத்தார் தங்கமான இ.போ.ச. நடத்துனர்

(கொழும்பு)

புத்தளம் பிரதேச இ.போ.ச பேருந்தில் தவறவிடப்பட்ட சுமார் ஐந்து இலட்சம் பெறுமதியான தங்க நகைகளுடன் கூடிய கைப்பையினை பஸ்ஸின் நடத்துனர் அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

புத்தளம் பேருந்து டிப்போவில் அண்மையில் இடம்பெற்றுள்ள இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 9 ஆம் திகதி பகல் கற்பிட்டியிலிருந்து புத்தளம் ஊடாக குருநாகல் செல்லும் பேருந்தில் புத்தளம் நகருக்கு வந்துள்ள திருமணமான தம்பதியினர் அவர்கள் வசமிருந்த கைப்பையினை பேருந்தில் தவறவிட்டுவிட்டு இறங்கிச் சென்றுள்ளனர்.

குறித்த கைப்பை பேருந்தில் இருந்து கண்டெடுத்த குறித்த நடத்துநர் அதனை தான் கடமையாற்றும் புத்தளம் பேருந்து டிப்போவில் ஒப்படைத்துள்ளார்.

இதேநேரம் தமது கைப்பை தவறவிடப்பட்டதை அறிந்த குறித்த தம்பதியினர் அது பற்றி டிப்போவுடன் தொடர்பு கொண்டு விசாரித்துள்ளனர்.

இதனையடுத்து சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் ஆயிரத்து 500ரூபாய் பணம் என்பன உள்ளடங்கிய கைப்பை அன்றைய தினம் மாலையில் அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(2-14)

# அரச வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## ஐ.தே.க. தெரிவிப்பு

அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயுலத் ஜயவர்த்தன வைத்தியசாலைகளின் சாதாரண காயத்திற்கான மருந்துப் பொருட்கள் தொடக்கம் சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் வரை அனைத்தும் தட்டுப்பாடாகவே உள்ளதென கூறியுள்ளார்.

இலவச சுகாதார சேவையில் ப்ரசிட்ட மோல் வில்லைகளுக்கும் விரைவில் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காசல் மகப்பேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் தமக்குத் தேவையான மருந்துப் பொருட்களை வெளியில் இருந்து எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றுமொரு ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றமை ஆச்சரியத்துக்குரிய விடயமல்லவெனவும் கூறியுள்ளார்.

வைத்தியசாலையில் எதிர்க்கட்சியினர் கூறும் அளவிற்கு மருந்துத் தட்டுப்பாடு இல்லை என அவர் வலியுறுத்தியுள்ளார். (2-14)

# ஒன்லைன் விசா நடைமுறையால் வருமானம் அதிகரிக்கின்றது

## சூலரத்ன பெரேரா

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வரும் வெளிநாட்டவர்களிடமிருந்து ஒன்லைன் விசாவுக்காக கடந்த 10 நாட்களுக்குள் மாத்திரம் 7 கோடி ரூபா பணம் வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதம கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலரத்ன பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 10 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் நேற்று முன்தினம் நண்பகல் வரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் சுமார் 2 ஆயிரம் வெளிநாட்டவர்கள் இலங்கை வருகை தந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்குள் வருபவர்களுக்கு இதுவரை காலமும் இலங்கை இலவச விசா வழங்கி வந்துள்ளது.

இந்நிலையில் இலவச விசா வழக்கும் நடைமுறை கடந்த 2011 டிசெம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் இரத்துச் செய்து அதற்கு பணம் அறவிடுமாறு கோத்தபாய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியிருந்தார். ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வெளிநாடுகளிலிருந்து இலங்கை வரும் வெளிநாட்டவர்களிடமிருந்து கடந்த 10 நாட்களுக்குள் 7 கோடி ரூபா அறவிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

(2-14)

# கிராமசேவகர் பிரிவுகளுக்கு 10 இலட்சம் வழங்கப்படும்

கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் கிராம சேவகர் பிரிவுகளுக்கும் 10 இலட்சம் ரூபா வழங்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பிரதேச சபை உறுப்பினர்களின் கீழுள்ள கிராமசேவகர் பிரிவுகளில் சிறந்த அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த வருடத்தில் சகல மாகாணசபை உறுப்பினர்களுக்கும் 150 இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என பதில் பொருளாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-14)

# தரம் குறைந்த பெற்றோலை விற்க அரசிற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை

(கொழும்பு)

மாசடைந்த பெற்றோலை விற்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை என தெரியவருகிறது. அரசாங்கம் விதித்த நிபந்தனையின் கீழ் பெற்றோலை வாங்குவதற்கு எவரும் முன்வராமையே இதற்கு காரணம்.

எமிரேட்ஸ் நஷனல் ஒயில் கம்பனியின் சிங்கப்பூர் கிளையிலிருந்து கடந்த வருடம் 2 ஆயிரம் தொன் எரிபொருளை இலங்கை இறக்குமதி செய்தது. இந்த எண்ணெய் தரம் குறைந்தது என அறியப்பட்டதும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தபானம் அதன் விநியோகத்தை நிறுத்தியது. பின்னர் எஞ்சியிருந்த 2 ஆயிரத்து 600 தொன் எரிபொருளை நியாயமான ஒரு விலைக்கு விற்க தீர்மானித்து அமைச்சு அதற்கென கேள்விப்பத்திரங்களை கோரியது.

ஒரேயொரு சர்வதேச நிறுவனமே இதை வாங்க முன்வந்தது. ஆனால், அந்த கம்பனியின் நிபந்தனைகளுக்கு நாம் ஒப்புக்கொள்ளாததால் அதுவும் விலகிக் கொண்டது என அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறினார்.

நாம் வேறு கேள்விப்பத்திரங்களை கோரியுள்ளோம். பொருத்தமான கேள்வி வரும் போது நாம் கையிருப்பை விற்போம் என அமைச்சர் கூறினார். தற்போது மேற்படி தரக்குறைவான எரிபொருள் கையிருப்பு கொலன்னாவையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. (2)

# இருதாய்க்கு; ஒரு பிள்ளை!

சுனாமியில் காணாமல்போன ஓர் சிறுமியை ஏழு வருடங்களின் பின்னர் இரு பெற்றோர்கள் உரிமை கோரும் விசித்திர சம்பவம் கல்முனையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமியின் போது காணாமல் போன தகது மகள் உயிரோடு இருப்பதாக பெற்றோர் கூறுகின்றனர்.

இந்நிலையில் கல்முனையில் வசித்து வரும் அவரை தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என அவர்கள் வாதிடுகின்றனர். எனினும் அதனை மறுக்கும் மறுபகுதியினர் அவர் தங்கள் பிள்ளை என வாதிட்டு வருகின்றனர். இந்தவிதமான வாதாட்டங்களுக்கு மத்தியில் இவ்விவகாரம் பொலிஸார் வசம் சென்றுள்ளது.

பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் இவ்விடயம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சுனாமி அனர்த்தத்தின் போது சிறுமி ஒருத்தி காணாமல் போயுள்ளார். இந்நிலையில் ஏழு ஆண்டுகளுக்கு பின்னர் சம்மாந்துறை பிரதேசத்தில் அவர் உயிருடன் இருப்பதாக தகவல் கிட்டியுள்ளது.

கல்முனை இஸ்லாமாபாத் பிரதேசத்தை சேர்ந்த சீனு முகமது பாத்திமா இர்பானா என்ற சிறுமியே தனது ஒன்பதாவது வயதில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு காணாமல் போயுள்ளார்.

பெற்றோர் தேடியும் அவர் கிடைக்காத காரணத்தினால் குறித்த சிறுமி உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டு மரண அத்தாட்சி பத்திரம் பெறப்பட்டுள்ளது.

எனினும் பெற்றோருக்கு கிடைத்த தகவல்களை அடுத்து அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சிறுமியை தேடி சம்மாந்துறை பிரதேசத்துக்கு வந்துள்ளனர்.

அங்கு வேறு ஒரு பெயரில் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் சிறுமி இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பெற்றோர் அங்கு சென்றுள்ளனர். எனினும் சிறுமி தங்கள் பிள்ளை எனவும் எக்காரணம் கொண்டும் அவரை ஒப்படைக்க முடியாது எனவும் வினயமாக எடுத்துக் கூறியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்திலேயே சிறுமியை உரிமை கோரும் பெற்றோர் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(2-14)

# தங்க பிஸ்கட் கடத்த முயன்றவர் — கட்டுநாயக்கவில் கைது —

2 கோடி ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுக்களை கடத்த முயற்சித்த ஒருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

55 வயதுடைய இலங்கையரான இவர் இந்தியாவின் மும்பைக்கு 18 தங்க பிஸ்கட்டுக்களை கொண்டு செல்ல முயற்சித்த வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே சட்டவிரோதமான முறையில் 31 ஆயிரம் அமெரிக்க டொலர்களை தாய்லாந்திற்கு கொண்டு செல்ல முற்பட்ட தாய்லாந்து பெண்ணொருவர் கட்டுநாயக்க வானூர்தி தள பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட இந்த பெண்ணிடம் இருந்து பெறப்பட்ட நாணயங்களின் பெறுமதி 35 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் நேற்று அதிகாலையில் பேங்போக் செல்ல தயாரான நிலையில் இருந்த வேளையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். (2-14)

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்கள் அதிகரிப்பு


தெற்கு அதிவேக வீதியில் காணப்படும் பனி மூட்டம் காரணமாக காலை வேளையில் அவ் வீதியில் பயணிக்கும் சாரதிகள் வாகனங்களை செலுத்தும்போது அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பனி மூட்டத்தினால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதன் காரணத்தினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் பிரிவினர் இந்த வீதியில் இம்மாதத்தில் மாத்திரம் 17 விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

வேகத்தை கட்டுப்படுத்த முடியாமற் போனமையே அதிகளவான விபத்துக்களுக்கு காரணம் எனவும் விபத்துக்களில் பலர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-14)

## இயற்கை, அடக்குமுறையாளர்களால் மக்கள் வாழ்வு சின்னாபின்னமாகின்றது

### சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு



(கிளிநொச்சி)

மக்களின் வாழ்வியலில் இருக்கக்கூடிய நெருக்கடிகள் இயற்கை சார்ந்து தொடர்ந்து வந்தாலும் அதை வென்று வாழும் மனோ பலம் எம்மக்களிடம் கூடவே வந்தது.

ஆனால் ஆயுத முனை அடக்கு முறை யாளர்களால் சின்னாபின்னப்பட்ட இம்மக்களின் வாழ்வியல் இன்னும் இரட்டிப்பு அடக்கு முறைக்குள் தள்ளப்பட்டுள்ளது என பாரா ளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எம்.பி. தெரி வித்துள்ளார்.

இவரின் ஏற்பாட்டில் கிராமங்கள்தோறும் மாணவர்களின் நலன்கருதி கனடா வாழ வைப்போம் அமைப்பு அப்பியாச கொப்பி களை வழங்கி வருகின்றது.

கிளிநொச்சி தருமபுரத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு மாணவர்க ளுக்கு அப்பியாச கொப்பிகளை வழங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

வளம் நிறைந்த இக்கடலோர மண்ணில் பல வரலாற்றுகளின் தடங்கள் இருக்கின்றது. இம்மண்ணில் தோன்றி வளர்ந்த பாரம் பாரியம் எமது தமிழர் வரலாற்றில் ஒழுக்கங்க ளோடு கூடியதாக நமக்கு கிடைக்கின்றது.

இப்பிரதேசத்தில் தடைகளும் அடக்குமுறை களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய சூழலில்தான் மாணவர்களின் கல்வியும் சவால் நிறைந்ததாக அமைந் துள்ளது.

ஆயினும் சவால்களை வென்று சாதனை படைக்கும் மாணவர்களாக இம்மண்ணில் மாணவர்கள் திகழ வேண்டும் என தெரிவித் துள்ளார்.

இதனை தொடர்ந்து நீண்டகால கல்வி வரலாற்றுக்கு சொந்தமான தருமபுரம் மகா வித்தியாலயம் இம்மண்ணில் இருப்பது மிகச் சிறப்பானது. ஆனால் அதை சரிவர பயன் படுத்தி இம்மண்னை இன்னும் மேம்படையச் செய்கிற பணி மாணவர்களின் கையிலும் பெற்றோர்களின் கையிலும் தான் இருக்கி ன்றது என இந்நிகழ்வில் கலந்து கொண்ட த.தே.கூட்டமைப்பின் மாவட்ட அமைப்பாளர் வேழமாலிகிதன் உரையாற்றும் போது தெரி வித்துள்ளார்.

(2-14)

## அகதிகளை கட்டுப்படுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வரும் அகதி களை கட்டுப்படுத்துவது தொடர்பில் இந் தோனேசியாவின் ஒத்துழைப்பு சாதகமான முறையில் கிடைக்கப்பெறுவதாக அவுஸ் ரேலியா தெரிவித்துள்ளதாக அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் கெவின்ரூட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் இந்தோனேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் மார்டி நடலேகவாவை நேற்று முன்தினம் சந்தித்து பேசியதன் பின்னரே அவர் இந்தக் கரு த்தை வெளியிட்டுள்ளார்.

இந்தோனேசியா தமது விசா கட்டுப் பாட்டுகளை தளர்த்தியதன் பின்னர் அவுஸ்தி ரேலியாவை நோக்கிய அகதிகளின் வருகை அதிகரிக்கும் என அவுஸ்திரேலியா அச்சம் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் விசா கட்டுப்பாடுகளை தளர்த்தும் திட்டத்தை இரத்து செய்யுமாறு அவுஸ்திரேலியா தரப்பில் கோரப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. (2-14)

## ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு புதிதாக ஆறு விமானங்கள்

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகருக் கும் தென்கொரியாவின் சியோல் நகருக்கும் புதிதாக இலங்கையின் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

சிவில் விமான போக்குவரத்து அமைச் சின் 2012 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது. இச்சந்தர்ப்பத்திலேயே அமைச் சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதுள்ள ஸ்ரீலங்கன் விமான சேவைக் குரிய 21 விமானங்கள் சுமார் 27 விமானங்க ளாக அதிகரிக்கப்படும். தற்போதுள்ள இரண்டு சீ பிளேன்களுடன் மேலும் மூன்று சீ பிளேன் கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இவ் விமான சேவைக்குரிய ஏ 330 ரக மற்றும் ஏ 340 ரக பழைய விமானங்கள் அனைத்தும் நவீன மயப்படுத்தப்படும். ஏ 330 ரக, ஏ 340 ரக விமானங்களும் புதிதாக கொள்முதல் செய்யப்படும். தற்போது சேவை யிலீடுபடுத்தப்பட்டுள்ள ஏயார்டெக்ஸி சேவை தினமும் 14 சேவைகள் நடத்துகிறது.

ஏனைய நாடுகளுடன் விமானசேவை நடத்தும் போது ஏற்படும் போட்டியை சமாளிக் கும் விதத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான சேவையை விஸ்தரிக்கும் தேவையும் ஏற் பட்டுள்ளது. எனவே மத்திய கிழக்கில் சவுதி அரேபியா போன்ற நாடுகளுக்கு ஸ்ரீலங்கன் விமான சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்காக புதிய விமானங்கள் கொள் வனவு செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ள தாகவும் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கன் விமான சேவை இந்தியாவின் கொச்சின் நகருக்கும் சீனாவின் முகாச்சி நகருக்கும் ரஷ்யாவின் மொஸ்கோ நகருக்கும் புதிதாக சேவையை விஸ்தரித்துள்ளது என்றும் அமைச்சர் குறிப் பிட்டுள்ளார். (2-14)

## ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் இருவருக்கு விளக்கமறியல்

மாணவர்களுக்கு தடை செய்யப்பட்ட வல யமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள ஸ்ரீஜய வர்த்தனபுர பல்கலைக்கழக வளாகத்தில் தங்கியிருந்தபோது கைதுசெய்யப்பட்ட இர ண்டு மாணவர்களையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கங்கொடவில நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணி யளவில் குறித்த மூன்று மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்தபோது கைது செய்யப்பட்டதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் இருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க அநுராதபுரம் பிக்கு கள் பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டில் கல்விபயிலும் தேரர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஆறு பிக்கு மாணவர்களுக்கு விதிக்கப்பட் டுள்ள வகுப்புத்தடையை நீக்குமாறு வலியு றுத்தியே வகுப்புப் பகிஷ்கரிப்பை தேரர்கள் மேற்கொண்டுள்ளனர். (2-14)

## சுற்றுலா செய்யக்கூடிய இடங்களின் பட்டியலில் இலங்கையின் இடம் நீக்கம்- நியூயோர்க் ரைம்ஸ்

இவ்வாண்டில் சுற்றுலா செல்வதற்கான மிகச்சிறந்த 45 இடங்களை தெரிவுசெய்து நியூயோர்க் ரைம்ஸ் வெளியிட்ட பட்டியலில் இலங்கையின் பெயர் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி சுற்றுலா செல்வதற் கான மிகச்சிறந்த பட்டியலிட்டு வெளியிட்டு ள்ள போதே இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

தங்காலை விடுதியொன்றில் கடந்த நத் தார் நாளன்று பிரித்தானிய சுற்றுலாப் பயணி சுட்டுக்கொல்லப்பட்டு அவரது நண்பியான ரஷ்யப் பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத் தப்பட்ட சம்பவத்தையடுத்தே இலங்கை இந் தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவைத் தளமா கக் கொண்ட நஷனல் ஜியோகிராபிக் டிவலர் எனும் ஆண்டின் சுற்றுலா செல்வதற்கு சிறந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையையும் தெரிவு செய்திருந்தது.

அதேபோல பிரித்தானியாவில் வெளி யிடப்படும் இதழ்ஒ ன்று 2012 இல் சுற்றுலா செல்வதற்கு மிகச்சிறந்த 5 இடங்களில் ஒன் றாக இலங்கையையும் தெரிவுசெய்து பட்டிய லிட்டிருந்தது.

ஆனால் இலங்கையில் மேற்படி கொலைச் சம்பவத்தையடுத்து ரைம்ஸ் வெளியிட்ட சுற் றுலா செல்வதற்கு உகந்த மிகச்சிறந்த 45 இடங்களின் பட்டியலில் இலங்கை இடம் பெற வில்லை என்பது இலங்கையின் சுற்றுலாத் துறை அதிகாரிகளையும் சுற்றுலா விடுதித் துறையினரையும் பெரிதும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கைக்கு 8 இலட் சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தனர். 2016ஆம் ஆண்டில் இல ங்கை 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் கவரும் இலக்கை நிர்ணயித்துள்ளது குறிப் பிடத்தக்கது. (2-14)

## போர்க்குற்ற விசாரணைகளினை வெளிநாட்டு தலையீடின்றி நடத்துக

### ஸ்லோவேனிய நீதிபதி

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர் பில் இலங்கை வெளிநாடுகளின் தலையீடி ன்றி விசாரணைகளை நடத்த வேண்டும். இல்லையேல் சர்வதேச விசாரணைகள் கார ணமாக இலங்கைக்கு சாதக நிலைகளை காட்டிலும் பாதகநிலைகள் அதிகம் ஏற்ப டுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக ஸ்லோ வேனிய உயர் நீதிபதி ஒருவர் தெரிவித்துள் ளார்.

மற்றவர்கள் வந்து பிரச்சினைகளை ஏற்ப டுத்தும் முன்னர் இலங்கை அதற்கான பாதை களை மூடுவது சிறந்தது என்று சுலோவேனி யாவின் சட்டவாக்கல் நீதிமன்றத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரச்சினைக்கு கடந்த 10 ஆண்டுகளில் வெளிநாடுகளில் தலையீடு கள் இருந்தன. எனினும் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படவில்லை .

எனவே வெளிநாடுகளின் தலையீட்டை தவிர்ப்பது அவசியமானது என்று சட்டவாக்கல் நீதிமன்றத்தின் தலைவர் உள்நாட்டிலேயே நல்லிணக்க ஆணைக்குழு என்ற அமை ப்பை ஏற்படுத்தி அதன்மூலம் பரிந்துரை களை வெளியிட்டமையை தாம் வரவேற் பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது சிறந்த ஒரு முன்னெடுப்பாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். எனினும் இந்த ஆணைக்குழுவின்மூலம் பழைய பிழை களை களைந்து சரியான பாதை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று சுலோ வேனிய நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் விடயத்தின் போது போர் குற்றங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

யாரும் தோற்கடிக்கப்பட்டாலோ அல்லது பிழை செய்திருந்தாலோ இந்த விடயங்களில் நல்லிணக்கம் அவசியமானது.அதுவே ஒன் றிணைந்து வாழ்வதற்கான நிலையை ஏற் படுத்தும் என்றும் தலைவர் சுட்டிக்காட்டினார்.

லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம் பெற்ற சொற்பொழிவு ஒன்றுக்காக வந்தி ருந்தபோது ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்தக்கருத்துக் களை பகிர்ந்து கொண்டார். (2-14)

## திரைப்படம் தயாரிப்பு

கடந்த 30 வருடப்போரினால் பாதிக்கப் பட்ட இலங்கை மக்களை பயங்கரவாதத் திலிருந்து மீட்டெடுப்பது தொடர்பான திரைப் படம் ஒன்று ஜனாதிபதி செயலக அனுசரணை யுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.


மாத்தா எனும் பெயரைக்கொண்ட இத் திரைப்படம் கடந்தகால போர் அனர்த்தங் களினால் பாதிக்கப்பட்ட சமூகமயமாக்கலைக் கொண்டது என தெரிவிக்கப்படுகிறது.

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சு மேற்படி படத் தயாரிப்புக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. (2-14)

# தூணாக நின்ற தமிழன் துரும்பானது ஏன்?

## தமிழகப் பார்வை

**பழ.நெடுமாறன்**


பழ.நெடுமாறன்

இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ பதினாறில் ஒரு பங்கு தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்களுக்குரிய அங்கீகாரம் என்பது இந்திய அரசியலில் அளிக்கப்படவில்லை. இந்திய அரசும் சரி, அகில இந்திய அரசியல் கட்சிகளும் சரி தமிழர்களின் தலையாய பிரச்சினைகளைக் குறித்துக் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை.

தமிழ் நாட்டின் அண்டை மாநிலங்கள் தமிழகத்திலிருந்து உணவுப் பொருட்கள், துணி, சிமெண்ட், மின்சாரம் போன்ற பலவற்றை எவ்விதமான தங்கு தடையுமில்லாமல் பெற்றுக் கொள்கின்றன. இயற்கையிலேயே தண்ணீர் பற்றாக் குறையான தமிழகத்துக்குத் தங்களிடம் மிகையாக உள்ள தண்ணீரைக் கூடத் தர அவர்களுக்கு மனமில்லை. பிடிவாதமாக மறுக்கின்றன.


இந்திய விடுதலைப் போரில் தமிழகம் செலுத்தியிருக்கிற பங்கு அளப்பெரியதாகும். தென்னாபிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிய மோகனதாஸ் காந்தியின் அறப்போராட்டங்களுக்குத் துணையாக நின்று அவரை மகாத்மா காந்தியாக ஆக்கியவர்கள் தமிழர்கள். அவர் அழைப்பை ஏற்றுச் சிறை புகுந்தவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். அவர்களில் ஒருத்தியான தில்லையாடி வள்ளியம்மை தனது உயிரைத்தியாகம் செய்து காந்தியடிகளின் அறப்போராட்டத்துக்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்தினார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த ராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜ் போன்ற பல தலைவர்களும் எண்ணற்ற தொர்ண்டர்களும் காந்தியடிகளை உளமாறப் பின்பற்றி எண்ணற்ற தியாகங் களைச் செய்தார்கள். அண்ண லின் அழைப்பையேற்று அறப்போரில் தடியடிக்கு ஆளாகி உயிர்நீத்தான் திருப்பூர் குமரன்.

நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூரில் முதலாவது இந்திய சுதந்திர அரசை நிறுவி, இந்திய தேசிய இராணுவத்தை அமைத்த போது அவருக்குத் தோள் கொடுத்துத் துணை நின்றவர்களில் பொரும்பாலோர் தமிழர்கள்.

முதலாவது சுதந்திர இந்திய அரசு அமைக்கப்பட்டபோது நிதியமைச்சர் பொறுப்பைத் தமிழரான ஆர்.கே. சண்முகம் செட்டியாரிடம் பிரதமர் நேரு ஒப்படைத்ததைத் தொடர்ந்து, முதலாவது கவர்னர் ஜெனரலாக ராஜாஜி, அமைச்சர்களாக டி.டி.கிருஷ்ண மாச்சாரியார், ஓ.வி. அழகேசன், ஆர்.வெங்கட்ராமன், சி.சுப்பிரமணியம் போன்ற பலர் பெரும் பொறுப்புக்கள் வகித்துச் சிறப்பாகத் தொண்டாற்றி தமிழகத்துக்குப் பெருமை ஈட்டிக் கொடுத்தார்கள். அவர்களுடன் நமக்குக் கருத்து மாறுபாடு இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒருபோதும் தமிழுக்கோ, தமிழினத்துக்கோ, தமிழகத்துக்கோ சிறுமை தேடித்தரவில்லை.

அகில இந்தியக் கட்சிகளின் தலைவர்களாகவும் பல தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள். காங்கிரஸ் தலைவராக காமராஜ், முஸ்லிம் லீக் தலைவராக காயிதே மில்லத் முகமது இஸ்மாயில், பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவராக உ.முத்துராமலிங்கத்தேவர் மற்றும் பி.கே.மூக்கையாத்தேவர் போன்ற பலர் பொறுப்பு வகித்து அந்த பதவிகளுக்கே பெருமை தேடித்தந்தார்கள்.


முல்லைப் பெரியாறு

இந்தியாவில் இப்படிப் பிற மாநிலத்தவர்களால் மதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்த தமிழர்களின் இன்றைய நிலையை எண்ணிப் பார்த்தால் பரிதாபப்படவேண்டியுள்ளது. தமிழகத்தை வாட்டி வதைத்துவரும் பல்வேறு உயிர் நாடியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி தெரியாமல் தமிழன் திகைத்துக் கிடக்கிறான். அவன் தலையில் மிளகாய் அரைக்கும் வேலையை மற்ற மாநிலங்கள் செய்கின்றன. 30 ஆண்டு காலத்துக்கு மேலாக முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை தமிழகத்தின் 5 தென் மாவட்டங்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. உறுதியாக நிற்கும் முல்லைப் பெரியாறு அணை பலவீனமாக இருக்கிறது. என கேரள அரசியல்வாதிகள் இணைந்து நின்று பொய்மைக் கூப்பாட்டைக் கிளப்பி தமது நோக்கத்தில் வெற்றி பெற்று விட்டார்கள்.

மத்திய நீர்வள ஆணையம் கூறியபடி 12.5 கோடி ரூபாய் செலவில் நாம் அணையை மேலும் வலுப்படுத்தினோம். முழுமையாக வலுப்படுத்தியபிறகு அணையின் நீர்மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் என மத்திய நீர்வள ஆணையம் கூறியதை கேரளமும் ஏற்றுக் கொண்டது. ஆனால், அணையின் மராமத்து வேலைகள் முடிந்த பிறகும் இன்றுவரை நீர்மட்டத்தை உயர்த்த மறுக்கிறது.

வேறுவழியில்லாமல் உச்சநீதி மன்றத்தில் தமிழகம் முறையிட்டது. அவர்களும் விசாரித்து இறுதியாக 2006 ஆம் ஆண்டில் 142 ஆடிக்கு நீமட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் எனத்தீர்ப்பு அளித்தனர். ஆனால், அந்தத்தீர்ப்பையும் நம்மால் நிறைவேற்ற முடியவில்லை. கேரளத்தின் முடிவை மீறி மத்திய அரசும் எதுவும் செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம், மத்திய அரசில் அங்கம் வகிக்கின்ற கேரள அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கேரள உயர் அதிகாரிகளும் இணைந்து நின்று உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை அமுலாக்க விடாமல் சாதிப்பதில் வெற்றி பெற்றுவிட்டார்கள்.

தமிழகத்திற்குத் தண்ணீர், கேரளத்திற்குப் பாதுகாப்பு-அதற்கு ஒரேவழி புதிய அணைகட்டுவது என்று கேரளம் கூறுகிறது. மத்தியில் பதவிவகிக்கும் கேரள அமைச்சர்கள், கேரள முதலமைச்சர் தலைமையில் அனைத்துக்கட்சித் தலைவர்களின் குழு ஆகியோர் பிரதமரையும் மற்ற மூத்த அமைச்சர்களையும் சந்தித்து தங்கள் திட்டத்திற்கு ஆதரவு திரட்டியிருக்கிறார்கள்.


அதேவேளையில் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கிற தமிழக அமைச்சர்கள் தமது கடமை வாய்மூடிக்கிடப்பதே என்ற ரீதியில் மௌனம் சாதிக்கிறார்கள். தமிழ் நாட்டில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை குறித்து கேரள அரசியல்வாதிகளைக் கண்டிக்கும் வகையில் ஏதோ சொன்னார், என்பதற்காக அவர் மீது அவர்கள் பாய்ந்தார்கள். உடனே அவர் தான், கூறியவற்றை யெல்லாம் திரும்பப் பெறுவதாகக் கூறிச் சரணாகதியடைந்தார்.


இவ்வளவுக்கும் பிரதமருக்கு அடுத்த பதவியான உள்த்துறை அமைச்சர் பொறுப்பில் இருப்பவர் ப.சிதம்பரம். அவரையே மிரட்டி பணியவைக்கக் கேரள அரசியல் வாதிகளால் முடிகிறது.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சரான ஏ.கே.அந்தோனி கடற்படையைச் சேர்ந்த நீர்மூழ்கி விரர்களை அனுப்பி பெரியாறு அணையின் வலிமையைச் சோதனை புரிய ஆணை பிறப்பித்தார். பிரச்சினை உச்சநீதிமன்ற பரிசீலனையில் இருக்கும்போது, அதில் தலையிட்டு தமிழகத்துக்கும் தெரிவிக்காமல் இத்தகைய அடாவடியில் அவர் ஈடுபட்டபோது அவரைக் கண்டிக்கக்கூட மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ஒரு தமிழக அமைச்சர்கள்கூட முன்வரவில்லை.

அதைப்போல காவிரிப் பிரச்சினையில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் காவிரி நதிநீரில் நமக்குள்ள உரிமையை கர்நாடகம் தட்டிப் பறித்தது.பேச்சுவார்த்தை என்ற பெயரில் இழுத்தடித்துக் காலம் கடத்தி, அதற்கு நடுவே புதிய அணைகளைக்கட்டி தண்ணீரைத் தடுத்து வேறுவழியில்லாமல் நடுவர் மன்றம் அமைக்கும்படி மத்திய அரசிடம் வேண்டிக் கொண்டோம். ஆனால், மத்திய அரசு அதைச் செய்ய முன்வரவில்லை.

(தொடரும்)



கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதலிடத்தைப் பெற்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை மாணவன் கமலக்கண்ணன் கமலவாசனுக்கு மக்கள் வங்கி ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையை அண்மையில் வழங்கிக் கௌரவித்தது. இந்நிகழ்வில் காசோலையினை மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன் வழங்குவதனையும் அருகில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபர், வல்வெட்டித்துறை கிளை மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி றொசட் தவநாயகம் ஆகியோர் நிற்பதனையும் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட சாரதியை கைதுசெய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைது செய்யுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நீதிமன்றத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய கொழும்பு மேலதிக நீதவான் இவோன் பெர்னாண்டோ இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ராகம இம்புல்பே பகுதியில் இருந்து கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு பாடசாலை சேவையில் ஈடுபடும் வான் ஒன்றில் வந்து செல்லும் 12 வயது சிறுமியே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த வானின் சாரதியே சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக தாம் விசாரணை மேற்கொள்கின்றமை தொடர்பாக தகவல் வெளியானவுடன் சந்தேக நபர் திடீரென நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக அதிகார சபையின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த வழக்கை இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு கொழும்பு மேலதிக நீதவான் தீர்மானித்துள்ளார். (2-14)

# சுதந்திர தின நிகழ்வுகளில் அரங்கேற்ற வவுனியாவிலிருந்தும் கலாசார நிகழ்வுகள்

அநுராதபுரத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள 64 ஆவது தேசிய சுதந்திர தின பண்பாட்டு பேரணியில் வவுனியா மாவட்டத்திலிருந்து எட்டு கலாசார நிகழ்வுகளை அரங்கேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்று வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

மேற்படி கலாசார நிகழ்வுகளின் மூலம் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த சுமார் 450 மாணவர்கள் முதன் முறையாக தேசிய சுதந்திர தின விழாவில் கலை நிகழ்வுகளை வழங்கும் வாய்ப்பை பெறவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

அரச நிர்வாக மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு மேற்படி பண்பாட்டு பேரணிக்கான ஒழுங்குகளை செய்துள்ளது.

வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி , வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம், வவுனியா பரக்கும் மகா வித்தியாலயம், வவுனியா உலுக்குளம் ஸ்ரீ சுமண மகா வித்தியாலயம், வவுனியா மடுக்கந்தை தேசிய பாட சாலை, வவுனியா தெற்கு கலாசார மத்திய நிலையம் ஆகியவற்றை சேர்ந்த மாணவ ,மாணவியர்கள் தத்தமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் கலாசார நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

சம்பந்தப்பட்ட கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கான ஆடை தயாரிப்பு மற்றும் உபகரண கொள்வனவுக்கென அரச நிர்வாக மற்றும் உள் நாட்டலுவல்கள் அமைச்சு போதிய நிதியினை வவுனியா மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கீடுசெய்துள்ளது. (2-14)

# தமிழக தொலைக்காட்சி அலைவரிசைகளை வடக்கில் ஒளிபரப்பு செய்ய வேண்டாம்

## புலனாய்வு பிரிவு கோரிக்கை

(கொழும்பு)

தமிழக தொலைக்காட்சி அலைவரிசைகள் வடக்கில் ஒளிபரப்பு செய்யப்படுவதாக திவயின பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழகத்திற்கு ஆதரவான தரப்பினர் வடக்கின் பல பகுதிகளில் கேபிள் தொலைக்காட்சி சேவைகளை நடத்தி வருகின்றனர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு சொந்தமான ஜெயா தொலைக்காட்சி மற்றும் விஜய் தொலைக்காட்சி போன்ற அலைவரிசைகளில் இலங்கைக்கு எதிரான தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

எனவே தமிழக தொலைக்காட்சி அலைவரிசைகளை வடக்கில் ஒளிபரப்புச் செய்யும் நடவடிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டுமென புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (2-14)

# 2012.01 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1610-கலிலியோ கலிலி வியாழனின் 4 ஆவது துணைக்கோளைக் கண்டுபிடித்தார்.

★ 1658-இங்கிலாந்தின் இராணுவ மற்றும் அரசியல் தலைவருமான ஒலிவர் குரொம்வெல்லுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டிய எட்வார்ட் செக்ஸ்பி என்பவன் லண்டன் கோபுர சிறையில் இறந்தான்.

★ 1830-லூசியானாவில் நியூ ஓர்லீன்ஸ் நகரில் பெரும் தீ பரவியது.

★ 1840-லோங் தீவில் லெக்சிங்டன் என்ற நீராவிக்கப்பல் மூழ்கியதில் 139 பேர் உயிரிழந்தனர்.

★ 1847-கலிபோர்னியாவில் மெக்சிக்கோ அமெரிக்கப் போர் காகுவெங்கா என்ற இடத்தில் எட்டப்பட்ட உடன்பாட்டின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

★ 1908-பென்சில்வேனியாவில் ரோட்ஸ் ஒப்பேரா மாளிகையில் தீப்பிடித்ததில் 171 பேர் உயிரிழந்தனர்.

★ 1915-இத்தாலியின் அவசானோ பிரதேசத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 29 ஆயிரத்து 800 பேர் உயிரிழந்தனர்.

★ 1930-மிக்கி மவுஸ் கார்ட்டூன் துணுக்குகளாக முதன் முதலாக வெளிவரத் தொடங்கியது.

★ 1938-இங்கிலாந்து திருச்சபை சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கையை ஏற்றுக் கொண்டது.

★ 1939-அவுஸ்திரேலியாவில் விக்டோரியா மாநிலத்தில் 20 ஆயிரம் சதுர கி.மீ.நீலம் காட்டுத்தீயினால் அழிந்தது. 71 பேர் உயிரிழந்தனர்.

★ 1942-ஹென்றி போர்ட் பிளாஸ்ரிக்கினால் ஆன தானுந்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1953-யூகொஸ்லாவியாவின் தலைவராக மார்ஷல் ஜோசிப் டீட்டோ தெரிவு செய்யப்பட்டார்.

★ 1964-கொல்கத்தாவில் இந்து, முஸ்லிம் கலவரம் மூண்டதில் நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

★ 1972-கானாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.

★ 1982-வோஷிங்டன் டிசியில் விமானம் ஒன்று பாலம் ஒன்றில் வீழ்ந்து நொருங்கியதில் 78 பேர் உயிரிழந்தனர்.

★ 1985-எதியோப்பியாவில் பயணிகள் தொடரூந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 428 பேர் உயிரிழந்தனர்.

★ 1991-சோவியத் படைவீரர்கள் லித்துவேனியாவில் சோவியத் ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட பொதுமக்களைத் தாக்கி 14 பேரைக் கொன்றனர்.

★ 1992-இரண்டாம் உலகப் போரின் போது கொரியப் பெண்களை பாலியல் அடிமைகளாக கட்டாயமாக சிறைப்படுத்தி வைத்திருந்தமைக்காக ஜப்பான் மன்னிப்புக் கோரியது.

★ 2001-எல்சல்வடோரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 800 பேர் உயிரிழந்தனர்.

★ 2006-சீனாவின் தென் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் 13 ஆயிரம் வீடுகள் இடிந்து தரை மட்டமாகின.

**பிறப்புக்கள்**

★ 1864-வில்ஹெம் வியென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1928)

★ 1879-மெல்வின் ஜோன்ஸ், அரிமா சங்கத்தை அமெரிக்கர் (இ.1961)

★ 1911-ஆனந்த சமரக்கோன், சிங்கள இசைக்கலைஞர் (இ.1962)

★ 1927-சிட்னி பிரென்னர், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்.

★ 1946-ஆர்.பாலச்சந்திரன், கல்வியாளர், கவிஞர் (இ.2009)

★ 1949-ராகேஷ் சர்மா, விண்வெளியில் பறந்த முதல் இந்தியர்

**இறப்புக்கள்**

★ 1906-அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர் (பி.1859)

★ 1941-ஜேம்ஸ் ஜோய்ஸ், ஐரிய எழுத்தாளர் (பி.1882)

# தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தை அரசாங்கம் பிச்சைக்காரனின் புண்ணைப்போல மாற்றிவிட்டுள்ளது

## ஜயலத் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தை அரசாங்கம் பிச்சைக்காரனின் புண்ணைப் போல் மாற்றிவிட்டுள்ளது. அரசியலமைப்பில் உள்ள அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும்பொழுது மாற்றுத் தீர்வை தேடி அரசாங்கம் காலத்தைக் கடத்துகின்றது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்களை அடக்க முடியவில்லை என்றால் பாதுகாப்பு அமைச்சரும் செயலாளரும் எதற்கு? இன்று ஜனாதிபதியின் சொந்த இடமான தங்காலையிலேயே வெளிநாட்டு பிரஜையொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதற்கு விசாரணைக்குழு அமைத்து என்ன பயன் என்றும் அக்கட்சி கேள்வி யெழுப்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பில் காணப்படும் 13 ஆவது திருத்தச் சட்டமானது தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வாக அனைவராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதனையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கடந்த காலங்களில் கூறிவந்தார். ஆனால் தற்போது யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் அரசாங்கம் பேச்சுவார்த்தை என காலம் கடத்துகின்றதே தவிர தீர்வை முன்வைக்கவில்லை.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அரசுக்கு உள்ளது. ஆனால் அதனை செய்யாது அரசாங்கம் பிச்சைக்காரன் தனது புண்ணை சொறிந்து ஆற விடாமல் ஆக்குவது போல் செயற்படுகின்றது. நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நிலையான சமாதானத்தை ஸ்தாபிக்க வேண்டிய தருணத்தில்



வீண் குளறுபடிகளை அரசு செய்கின்றது. ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாது சட்ட ஒழுங்கை அரசு அதல பாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது. கொலன்னாவை சம்பவம் மற்றும் தங்காலை சம்பவம் என பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது என ஜயலத் ஜயவர்த்தன கூறியுள்ளார். (2-14)

# நீதிபதிகள் நியமனம்

(கொழும்பு)

வவுனியா மாவட்ட நீதிபதியாக ஒன்றரை வருடம் பணியாற்றிய எம்.மொஹிதீன் கல்முனை மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் பெற்றுள்ளதையடுத்து கொழும்பில் பணியாற்றி வந்த நீதிபதி மொஹமட் மெக்கி வவுனியா மாவட்ட நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார்.

இவர் மேல் நீதிமன்ற ஆணையாளராகப் பதவி உயர்வு பெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் வவுனியா குடியியல் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றி வந்த நீதிபதி டி.எம். சமரக்கோன் குருநாகலை மேன்முறை யீட்டு நீதிமன்றத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இதனையடுத்து அம்பாறை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய நீதி பதி சந்திராமணி விஸ்வலிங்கம் வவுனியா குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார்.

இந்த இடமாற்றங்களும் நியமனங்களும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-14)

# தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சிகளில் ஒன்றான இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது 14 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனுடன் கலந்தாலோசித்ததன் பின்னர் கூட்டம் நடத்துவது தொடர்பான திகதி அறிவிக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் நாடு திரும்பியதன் பின்னர் பொதுச் சபைக் கூட்டத்தை நடத்தும் திகதி அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நூற்றாண்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் நோக்கில் சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பு பிரதிநிதிகள் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளனர். (2-14)

# பொது இடங்களிலுள்ள நீர்க்குழாய்கள் அகற்றப்படும்

## வடிகாலமைப்பு சபை

பொது இடங்களில் உள்ள நீர்க்குழாய்களை அகற்றுவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பொது இடங்களில் உள்ள நீர்க்குழாய்கள் மூலம் நீரைப் பெற்றுக் கொள்ளும் மக்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக வடிகாலமைப்புச் சபையின் தலைவர் கருணாசேன ஹெட்டி ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பொது நீர்க்குழாய்கள் மூலம் நீரைப் பெற்றுவந்த மக்களுக்கு குறைந்த செலவில் வீடுகளுக்கான நீர்க்குழாய் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் காணப்படும் நீர்க்குழாய்களில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீர் வீண் விரயமாவதாகவும் சிலர் வேறு தேவைகளுக்காக நீரைப் பயன்படுத்துவதாகவும் இதனால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு நட்டம் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-14)

# வளங்களை பாதுகாப்பது மக்களின் பொறுப்பு

## பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தமானது தெங்கு வளம் உட்பட நமது பிரதேசங்களின் பல்வேறு வளங்களின் அழிவிற்குக் காரணமாக இருந்தது. அந்த நிலை தற்போது மாற்றமடைந்து வருகின்றது. வளங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மக்களாகிய உங்களிடமே இருக்கின்றது.

அந்த வகையிலேயே இந்த கப்புறுக புறவர திட்டம் (தென்னை கிராமம்) அமைந்திருக்கிறது என மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான கப்புறு புறவர திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய அவர், நாட்டில் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தம் நாம் சிறு பராயத்தில் கண்ட பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்களைக்கூட இன்று மறக்கவைத்திருக்கின்றது. அந்த நிலை மாற்றமடைய வேண்டும். பிரதேசங்களின் கட்டுமானங்களையும் பாதைகளையும் அமைத்துத் தருவதுடன் மக்களின் வாழ்வாதாரத்தினையும் மேம்படுத்துவதன் மூலமே நாட்டினை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். அத்துடன் பொருளாதாரத்தினையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

தென்னை என்பது பல்வேறுபட்ட வகைகளிலும் எல்லா வகையானவற்றுக்கும் உதவி செய்கின்ற, பயன்படுகின்ற ஒரு விடயமாகும். அந்த வகையிலேயே நமது நாட்டின் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

நாட்டில் நடைபெறுகின்ற அபிவிருத்திகள் யாவுமே மக்களுக்காகவே நடைபெற்று வருகின்றன. அவற்றினை முழுமையாக மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். (2-14)

# மக்களின் சுகாதார மேம்பாட்டிற்கு வழியமைப்பதே சுகாதாரக் கல்வி

(கொழும்பு)

பொதுமக்கள் மத்தியில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பனவற்றின் மூலம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களது சுகாதார மேம்பாட்டிற்கு வழியமைப்பது சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான இலக்காகும்.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதாரக் கல்வி அதிகாரி எம்.ஜே. எம். பைரூஸ் தெரிவித்தார். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக நிர்வாகத்தின் கீழுள்ள சுகாதார கல்விப் பிரிவின் பணிகள், எதிர்காலத் திட்டங்கள் குறித்து பொறுப்பதிகாரி ஜனாப் பைரூஸ் விளக்கமளித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

சமூக மட்டம், பாடசாலை மட்டம், வைத்தியசாலை மட்டம், பொதுச் சேவை உத்தியோகத்தர்கள் மட்டம் என பல்வேறு பிரிவினரிடையே நாம் சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதன் மூலம் நாம் இலக்கை எய்தி வருகின்றோம்.

சமூகத்திலுள்ள மக்களை முன்னோக்கி நகர்த்துதல், சமூக குழுக்களையும் முன்னணிகளையும் உருவாக்குதல், கிராமத் தலைவர்களின் வழிகாட்டுதல்கள், இயலுமையைக் கட்டியெழுப்புதல், கிராம மக்கள் மத்தியில் தொடர்பாடல் மூலம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பன சமூக, சுகாதார, கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குகளாகும்.

எமது பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் புள்ளி விபரங்கள் பெறப்படுகின்றன. இதற்கு வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள், தொற்று நோய் தடுப்புப் பிரிவு, பிரதேச செயலகம், பாடசாலை, அரச சார்பற்ற நிறுவனம் என்பவற்றின் உதவி பெறப்படுகின்றது.

எமது பிரிவின் கடந்த காலப் பணிகள் வெற்றிகரமாக அமைந்தன. 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலுள்ள வைத்தியசாலைகள், சுகாதார நிலையங்கள் என்பனவற்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சியும் தேவையான இடங்களுக்கு சுகாதாரக் கல்விப் பொருட்கள், உபகரணங்கள் என்பனவும் சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டன்.

2011 இல் இனங்காணப்பட்ட பிரச்சினைகளில் எமது கவனம் கூர்மையாக்கப்பட்டுள்ளது.விவசாயப் பிரதேசங்களில் தங்கியுள்ள விவசாயிகள், சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பாடசாலை மாணவர் மத்தியில் வாழ்க்கைத் திறன் பயிற்சி குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றோம் என்றார். (2-14)

# க.பொ.த.(உ/த) பரீட்சை பெறுபேறுகள்-2011

(யாழ்ப்பாணம்)

**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

எஸ்.றெயுனா ஏ2பி,எஸ்.ராகவன் ஏ2பி, வி.தனராஜ் 3பி,ஜே.புவிலதன் பி2சி,எஸ். நிசாந்தி பி2சி, எஸ்.ஆதித்யா 3சி என்.கஜசரன் 3சி,பி.குபேரன் 3சி பி.ஜெஜோத் 2பிசி, கே.மணிவண்ணன் பி2சி

**உயிரியல்பிரிவு**

எஸ்.பர்ஷிகா ஏ2பி,எஸ்.பகீரதன் ஏ2பி,வி. ஐங்கரன் பி2சி,என்.சுரேகா 3சி,ஜி.மதுராங்கா 2சிஎஸ்,பி.தாரணி 3சி ,கே.மகிழினி 2பிசி,எஸ்.வினுஜா 2பிசி,பி.கமலபரன் பி2சி, ஆர்.ஜசோதாஜினி 3சி, எஸ்.நெடுஞ்செழியன் 3சி,ரி.அஜந்தா 3சி

**கலைப்பிரிவு**

பி.நேசன் 3ஏ, எஸ்.கஸ்தூரி 2ஏபி,ஆர். மிதுனா 2ஏபி எஸ்.குகப்பிரியா 2ஏபி,கே. உசாலினி ஏ2பி, கே.பிரியதர்ஷனா ஏ2பி,பி. தனுஷா ஏ2பி,ஜே.நிரோஜா ஏ2பி, கே.சுமங்கலி ஏ2பி, ரி.மீரா ஏ2பி, ரி.கார்த்திகா ஏபிசி, பி.குகவரதர் 3பி,வி.சரவணபவன் ஏபிசி,பி. சரிதா 2ஏபி,ஏ.ஆர்த்திகா ஏபிசி

**வர்த்தகப்பிரிவு**

எஸ்.கோபிகா 2ஏபி, ரி.சஞ்சித் ஏ2பி, ஆர்.பானுப்பிரியா ஏபிசி,எஸ் அகிலாண்டேஸ்வரி 3பி, எஸ்.சங்கரி பி2சி,ஜே. ஆரூரன் ஏசிஸ்.

# ஆசியாவில் மிகவும் மோசமானது இந்தியாவின் அதிகார முறைமையே

(டில்லி)

ஆசியாவிலேயே இந்திய அதிகார முறைமை தான் மிக மோசமானது என புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மொத்தம் 10 இடங்களில் இந்தியாவுக்கு 9.21 ஆவது இடம் கிடைத்துள்ளது. இப்பட்டியலில் வியட்நாம், பிலிப்பைன்ஸ், சீனா ஆகிய நாடுகள் இந்தியாவை விட முன்னேறியுள்ளன.

ஹொங்கொங்கைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஆசிய நாடுகளில் எந்த நாட்டில் அதிகார முறைமை சிறந்த முறையில் செயற்படுகிறது. எந்த நாட்டில் மிக மோசமாக செயற்படுகிறது என்பதை கண்டறிய சமீபத்தில் ஓர் ஆய்வு நடத்தியது. இதன்படி மொத்தம் 10 இடங்களில் 2.25 புள்ளிகள் பெற்று சிங்கப்பூர் முன்னணியில் உள்ளது. இதையடுத்து ஹொங்கொங், தாய்லாந்து, தைவான், ஜப்பான், தென்கொரியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. மலேசியாவை அடுத்து சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் உள்ளன. ஆனால், 9.21 புள்ளிகள் பெற்று இந்தியா கடைசியில் உள்ளது.

இது குறித்து அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது, இந்தியாவில் உள்ள அதிகார வர்க்கம் அதாவது அதிகாரிகள் திறமை குறைந்தவர்களாக உள்ளனர். இவர்கள் மீது ஊழல் உள்ளிட்ட மிகப் பெரியளவிலான புகார்கள் கூறப்படுகின்றன. இது இந்தியாவில் முதலீடு செய்ய வரும் அந்நிய நாட்டு நிறுவனங்களுக்கு மிகப்பெரிய தலைவலியாக உள்ளது.

குறிப்பாக இந்திய அதிகார முறைமையில் போதுமான உட்கட்டமைப்பு வசதி இல்லாதது, ஊழல் அதிகாரிகள் இலஞ்சத்துக்கு ஆசைப்படுவது போன்ற பெரும் பிரச்சினைகளாக உள்ளன. நிறுவனங்கள் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுப்பதன் மூலம் தங்களுக்கு சாதகமான காரியங்களை நிறைவேற்றிக் கொள்கின்றன.

மேலும் இந்தியாவில் தாறுமாறான மற்றும் கடும் சுமையை ஏற்படுத்தக் கூடிய வரிகள் சுற்றுச் சூழல் மற்றும் பிற கட்டுப்பாடுகள் ஆகியவை அந் நிய நாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்வதைத் தடுக்கின்றன.

இதனால் அந் நிறுவனங்களுக்குப் பெருமளவில் செலவு ஏற்படுகிறது. நீதிமன்றங்களுடன் இதனாலேயே பெரும்பாலான அந்நிய நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்யத் தயங்குகின்றன. இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(2-14)

# பேருந்து விபத்தில் 13 பேர் பலியாகினர்

(டில்லி)

உத்தரகண்ட மாநிலம் டெஹ்ரி மாவட்டத்தில் 23 பயணிகளோடு சென்ற அரசு பேருந்து 150 அடி உயரமுள்ள நைன்பாக் மலைப்பகுதியில் இருந்து கவிழ்ந்து விழுந்தது. கடுமையான பனிமூட்டம் காரணமாக வளைவு இருந்தது தெரியாமல் பஸ்ஸை ஓட்டியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும் இந்த விபத்தில் காயமடைந்த 10 பேர் டெஹ்ரியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(2-14)

# இந்திய முதல்வர்கள் யாவரிலும் பணக்கார முதல்வர் மாயாவதியே

ஜனநாயக சீர் திருத்தங்களுக்கான சங்கம் என்ற அரசு சார்பற்ற அமைப்பு வெளியிட்டுள்ள விபரங்களின்படி தமிழக முதல்வர் ஜெயலலிதா தனது 51 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இது தவிர ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டிக்கு 8.1 கோடி ரூபாய்கும் ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கிற்கு 4.7 கோடிக்கும் அரியான முதல்வர் பூபிந்தர்சிங் ஹுடாவுக்கு 3.74 கோடிக்கும் காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாவுக்கு 2 கோடிக்கும் குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு 1.78 கோடிக்கும் டில்லி முதல்வர் ஷிலா தீட்சித்திற்கு 1.9 கோடிக்கும் சொத்துக்கள் உள்ளன. விரைவில் சட்ட தேர்தல் நடக்க உள்ள மாநிலங்களில் ஒன்றான பஞ்சாப் முதல்வர் பிரகாஷ்சிங் பாதலுக்கு 6.76 கோடிக்கும் மணிப்பூர் முதல்வர் ஒக்ராம் இபோபிக்கு 6 இலட்சத்திற்கும் உத்தரகண்ட முதல்வர் பி.சி கந்தூரிக்கு 1.69 கோடிக்கும் கோவா முதல்வர் திகாம்பர் காமத்திற்கு 3.23 கோடிக்கும் சொத்துக்கள் உள்ளன. இவர்களை எல்லாம் மிஞ்சும் வகையில் உ.பி. முதல்வர் மாயாவதிக்கு 87.27 கோடிக்கு சொத்துக்கள் உள்ளன. இதன்மூலம் நாட்டிலேயே பணக்கார முதல்வர் இவர்தான் என்பது தெரியவந்துள்ளது.

(2-14)

# பாரதச் செய்திகள்

# இந்திய அணு உலைகள் வெளியிடும் கதிர்வீச்சால் மக்களுக்கு பாதிப்பில்லை

(சென்னை)

அணு உலைகள் வெளியிடும் கதிர்வீச்சால் மக்களுக்கு சிறிதளவும் பாதிப்பு ஏற்படாது என கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

கதிர்வீச்சால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்த கருத்தரங்கம் இந்திய அணு மின் கழகத்தின் சார்பாக சென்னையில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் இந்திய அணுமின் கழகத் தொழில்நுட்ப இயக்குநர் எஸ். ஏ. பரத்வாஜ், டாடா நினைவுமைய மருத்துவர் வி.ரங்கராஜன் ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

அணு உலைகளால் வெளியிடப்படும் கதிர்வீச்சால் புற்று நோய் உள்ளிட்ட சில நோய்கள் ஏற்படும் என மக்கள் மத்தியில் கருத்து நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறான எண்ணம் ஆகும்.

கதிர்வீச்சு என்ற சொல் நெடுங்காலமாகவே மக்களுக்கு பீதியை உண்டாக்கி வருகிறது. எனவே, மக்கள் கதிர்வீச்சு குறித்த முழுமையான அறிவை பெற வேண்டியது அவசியம்.

பூமியில் இயற்கையாகவே கதிர்வீச்சுக்கள் உருவாகி மனிதர்களைச் சென்றடைகின்றன. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். நீர், மணல், கல் என அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களில் இருந்தும் கதிர்வீச்சுக்கள் வெளிப்படுகின்றன. இவை மனிதர்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. மனித உடலில் உள்ள பொட்டாசியம், ரேடியம் ஆகிய வேதிப் பொருட்கள் கதிர்வீச்சுக்களை உண்டாக்குகின்றன. ஆனால், இவற்றால் பாதிப்பு கிடையாது. அதிக அளவிலான கதிர்வீச்சு வெளிப்பாடே உயிரினங்களை பாதிக்கும். அத்தகைய கதிர் வீச்சு அணுகுண்டு வெடிப்பின் போது மட்டுமே உருவாகும். அணு உலைகளிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சு மிகவும் குறைவான அளவே ஆகும்.

ஆனால், இந்தியாவில் உள்ள அணு உலைகளால் வெளியிடப்படும் கதிர்வீச்சின் அளவு ஆண்டுக்கு 0.42 முதல் 39.6 மைக்ரோசிவெர்ட் வரையே உள்ளது. எனவே, இந்தக் குறைந்த பட்ச அளவு கதிர்வீச்சால் மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் சிறிதளவு பாதிப்பு கூட ஏற்படாது.

இந்த நிலையில் 1995 முதல் 2010 வரை 15 ஆண்டுகளாக அணு உலையில் பணிபுரியும் தொழிலாளர் உடல் நலம் குறித்த ஓர் ஆய்வை இந்திய அணுமின் கழகம் நடத்தியது. இதில் அணு கதிர்வீச்சால் கடுமையான பாதிப்புகள் இல்லை என்பது தெரியவந்தது. எனவே, மக்கள் அணு உலை குறித்தும் கதிர்வீச்சுகள் குறித்தும் அச்சப்படத் தேவையில்லை என்றார்.

(2-14)

# 2ஜி வடிக்கில் அதிக ஆவணங்கள் சமர்ப்பிப்பு; சி.பி.ஐயின் மோசமான நடவடிக்கையே

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழல் வழக்கில் கூடுதலாகச் சில ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆ.ராசா உள்ளிட்ட குற்றம்சாட்டப்பட்டவர்களின் வழக்குரைஞர்கள் புதன்கிழமை ஆட்சேபம் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் சி.பி.ஐ தரப்பு சாட்சியான டிராய் அமைப்பின் முன்னாள் தலைவர் நிருபேந்திர மிஸ்ரா தொடர்பான சில ஆவணங்களைச் சமர்ப்பிக்க சி.பி.ஐ செவ்வாய்கிழமை மனுத்தாக்கல் செய்தது. நிருபேந்திர மிஸ்ராவின் சாட்சியம் புதன் கிழமை பதிவு செய்யப்பட்டபோது கூடுதலாக சி.பி.ஐயின் யின் நடவடிக்கைக்கு ஆ.ராசா மற்றும் முன்னாள் தொலைத்தொடர்புத்துறைச் செயலாளர் சித்தார்த்த பெகுரா உள்ளிட் டோரின் வழக்குரைஞர்கள் ஆட்சேபம் தெரி வித்தனர்.

கூடுதல் ஆவணங்கள் ஏன் தாக்கல் செய்யப்படுகின்றன என்பதற்கான முறை யான காரணம் எதையும் சி.பி.ஐ தெரிவிக்கவில்லை. அதனால் சி.பி.ஐயின் நடவடிக்கை மோசடியானது என்று அவர்கள் வாதிட்டனர். இந்த ஆவணங்களை சி.பி.ஐ சமர்ப்பிப்பது சட்டவிரோதமானது. முன்பு முக்கிய மற்றதாகக் கருதப்பட்டவை இப்போது திடீரென முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறி விட்டது ஏன்? சி.பி.ஐயின் நடவடிக்கையில் மோசடி இருப்பதையே இது காட்டுகிறது. என்று பெகுராவின் வழக்குரைஞர் எஸ்.பி மினோச்சா வாதிட்டார்.

(2-14)

# மகரஜோதிக்கு பின்னர் தமிழர்கள் மீது தாக்குதல்

கேரளாவில் மகரஜோதிக்கு பின்னர் தமிழர்களை தாக்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக மத்திய உளவுப்பிரிவு பொலிஸார் அறிக்கை அனுப்பி உள்ளனர்.


முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையால் தமிழக கேரள உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இரு மாநில மக்களின்.சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

கேரளாவில் தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அதேநேரம் தமிழகத்தின் கேரள மக்களின் சொத்துக்கள் மட்டுமே சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் மகரஜோதிக்கு பின்னர் அங்குள்ள தமிழர்களையும் அவர்களின் சொத்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என மத்திய உளவுத்துறை எச்சரித்து அறிக்கை அனுப்பி உள்ளது.

இந்த செய்தி கேரள பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது.

(2-14)



வீரத்துறவி விவேகானந்தாவின் பிறந்த நாளையொட்டி மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சில் அவரது உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் முதல்வர் மம்தா பானர்ஜி.

# டேட்டாவினை வகைப்படுத்துவதில் சிக்கலா?

அலுவலகப் பயன்பாட்டில் நாம் மிக அதிகமாக டேட்டாவினை எக்ஸெல் ஒர்சீட்டில் பயன்படுத்துகிறோம். இந்தத் தகவல்களை நாம் பல்வேறு வகைகளில் பட்டியிலிட்டுப் பெற விரும்புவோம். எடுத்துக்காட்டாக பொருட்கள் மற்றும் அவற்றின் விலை, வாங்கிய நாள் போன்ற தகவல்களை அமைக்கையில், விலைப்படி அல்லது வாங்கிய நாள் விலைப்படி வகைப்படுத்திப் பார்க்க விரும்பலாம். இதேபோல மாணவர்களின் பல பாடப்பிரிவுகளில் அவர்கள்பெற்ற மதிப்பெண்களை அமைக்கையில், இதே தேவை ஏற்படலாம். இதற்கு எக்ஸெல் புரோகிராம் வகைப்படுத்தும் வசதியான சோர்ட்டிங் (Sorting) வச தியைத் தருகிறது. இதிலும் நமக்குப் பல சிக்கல்கள் நேரிட வாய்ப்பு உண்டு. அவற்றை எவ்வாறு புரிந்துகொண்டு தீர்க்கலாம் என்று இங்கு பார்க்கலாம்.

பொதுவாக சிக்கல்கள் மூன்று காரணங்களினால் ஏற்படுகின்றன. முதலாவதாக டேட்டா வரிசையில் ஏதேனும் காலியாக நெட்டு வரிசைகளோ அல்லது படுக்கை வரிசைகளோ இருக்கும். காலி வரிசைகள் இருந்தால் எக்ஸெல் சோர்ட்டிங் செய்கையில் அந்த வரிசைகளில் நின்றுவிடும். எனவே இவற்றைச் சரி செய்து நாமாக வரிசைகளைத் தேர்ந்தெடுத்து சோர்ட் செய்திடவேண்டும்.



இரண்டாவதாக டேட்டா மிகமிக அதிகமாக இருக்கலாம். இவற்றை வைத்து தொகுத்துத் தருவதற்கான மெமரியில் இடம்குறைவாக இருக்கலாம். இதற்கு இருவழிகள் உள்ளன. ஒன்று மெமரியில் இடம்காலி செய்து சோர்ட்டிங் செய்வது அல்லது மெமரியைக்கூட்டுவது. மூன்றாவது வழியும் உண்டு. இதே டேட்டாவினை இன்னொரு கணனியில் சோர்ட் செய்வது. மூன்றாவது வகைப் பிரச்சினை நாம் எதிர்பாராத, ஆனால் நம்மால் உருவாக்கப்பட்ட பிரச்சினையாகும். டேட்டாவில் சில வகை எண்கள் டெக்ஸ்டாக போர்மட் செய்யப்பட்டிருக்கும். சிலவேளைகளில் எண்களின் வலது பக்கமாக கழித்தல் அடையாளம் இருக்கலாம். சரி, இவற்றை எப்படித்தீர்க்கலாம்? எண்கள் டெக்ஸ்டாக போர்மட் செய்யப்பட்டிருப்பதுதான் அடிக்கடி நடைபெறும் செயலாகும். எடுத்துக்காட்டாக ஒரு குழு டேட்டாவை சோர்ட் செய்து பின் பார்க்கிறீர்கள். நெட்டு வரிசையில் எண்கள் ஒன்று முதல் 1000 வரை இருக்கும். அடுத்த செல்லின் மீண்டும் ஒன்றிலிருந்து தொடங்கும். ஏன் இப்படி என்றால் இந்த எண்கள் டெக்ஸ்டாக போர்மட் செய்யப்பட்டிருக்கலாம். சோர்ட் செய்யப்படுகையில் முதலில் சரியான எண்கள் எடுக்கப்படும். பின் சரியான போர்மட் இல்லாத எண்கள் எடுக்கப்படும். எண்கள் டெக்ஸ ட்டாக போர்மட் செய்யப்பட்டிருந் தால் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிகளைப் பின்பற்றி அவற்றை எண்களாக மாற்றவும்.

- ஒரு காலி செல்லில் 1 என்ற எண்ணை அமைக்கவும்
- அந்த செல்லை செலக்ட் செய்து கொண்ட்ரோல்+ சி கீகளை அழு த்தி கொப்பி செய்திடவும். இது அந்த செல்லை கிளிப்போர்டுக்கு கொண்டு செல்கிறது.
- அடுத்து எந்த செல்களில் எல்லாம் எண்கள் டெக்ஸ்ட்டாக போர்மட் செய்யப்பட்டுள்ளன என்று எண்ணுகிறீர்களோ அவற்றைத்தேர்ந்தெடுக்கவும்.
- Edit மெனுவில் Paste Special பிரிவில் கிளிக் செய்திடவும்.
- Multiply ரேடியோ பட்டன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதனையும் உறுதி செய்திடவும்.
- ஓகே கிளிக் செய்திடவும்.
- காலி செல்லில் 1 என்று டைப் செய்ததை டிலீட் செய்திடவும்.

மேற்படி செயல்முறைகள் முடிந்தவுடன் டெக்ஸ்டாக போர்மட் செய்தவை எல்லாம் எண்களாக மாற்றப்பட்டிருப்பதனைப் பார்க்கலாம்.

இதில் ஒன்றை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். டெக்ஸ்ட்டாக போர்மட் செய்த வால்யூவில் ஸ்பேஸ் தவிர வேறு கரக்டர்கள் எதுவும் இருக்கக்கூடாது. எண்கள் இல்லாத வேறு கரக்டர்கள் இருப்பதனை கண்டறிந்து நீக்கிய பின்னரே மேலே சொன்ன செயற்பாடுகளை மேற்கொள்ளவும்.




# 2012 இல் சவாலைச் சந்திக்குமா மைக்ரோசொப்ட்?




சென்ற 2011 ஆம் ஆண்டு மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு அவ்வளவு சிறப்பான ஆண்டாக இருக்கவில்லை. டேப்ளட் சந்தையில் இந்நிறுவனத்தின் தயாரிப்பு எதுவும் அறிமுகமாகாதது பலரின் விமர்சனத்திற்குள்ளானது. மேலும் விண்டோஸ் போன் சரியாக விற்பனை இல்லாத நிலை மற்றும் கிளவட் கணனியில் பிரிவில் மிகத் தாமதமாக இறங்கியது ஆகியவையும் பலரால் எடுத்துரைக்கப்பட்டது.

இருப்பினும் இந்நிறுவனத்தின் வருமானம் சிறிதும் குறையாமல் அனைத்து பிரிவுகளிலும் சிறப்பாக உயர்ந்தது குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டு மைக்ரோசொப்ட் நிறுவனத்திடமிருந்து பல புதுமைகளை மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவற்றை நிறைவேற்றும் வகையில் தற்போது மைக்ரோசொப்ட் செயற்பட்டு வருகின்றது.

மிகப் பெரிய அளவில் எதிர்பார்க்கப்படுவது விண்டோஸ் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டத்தின் அறிமுகமாகும். குறிப்பாக டேப்ளட் பிசிக்களில் இந்த சிஸ்டம் முற்றிலும் மாறுதலான ஓர் அனுபவத்தினைத் தரும் என்று எதிர்பார்க்கலாம். ஐ பேட் சாதனத்திற்கு எதிரான போட்டியில் டேப்ளட் பிசி சந்தையில் இது மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு ஓர் இடத்தைக் கொடுக்கும்.

அப்பிள் ஐபேட் ஏப்ரல் 2010 இல் வெளியான போது பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்த பேர்சனல் கணனி சந்தை சிறிது ஆட்டம் கண்டது. விண்டோஸ் 8 சிஸ்டம் டேப்ளட் பிசி மற்றும் பேர்சனல் கணனி என இரு பிரிவுகளிலும் இயங்கும் வகையில் அறிமுகப்படுத்தப்படுவதால் நிச்சயம் இது மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்குக் கை கொடுக்கும்.

ஆனால் இரண்டும் வெவ்வேறு புரோசசர்களில் இயங்க இருப்பதால் இவற்றில் இயங்கும் வகையில் சொப்ட் வெயர் அப்ளிகேசன்களைத் தயாரிப்பவர்கள் இரு பங்கு உழைத்திட வேண்டியதிருக் கும்.மேலும் ஏற்கனவே வெளியான விண்டோஸ் 7 சிஸ்டத்தைக் காட்டிலும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவிற்கு விண்டோஸ் 8 மேம்பாடு கொண்ட அம்சங்களைக் கொண்டிருக்கப் போவதில்லை என்பதால் இதனை மக்கள் அவ்வளவாகச் சிறப்பாகப் பேசப்போவதில்லை. ஒரே ஒரு சிறப்பான அம்சம் என்னவெனில், அது மல்ட்டி டச் வசதி மட்டுமே.

எனவே டேப்ளட் பிசிபிரிவில் மைக்ரோசொப்ட் மிகக் கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கும். தன் சிஸ்டம் இயங்கும் வகையில் டேப்ளட் பிசிக்கள் சந்தையில் வருவதற்கு துணை புரிய வேண்டியதாய் இருக்கும். இந்த வகையில் மைக்ரோசொப்ட் நிறுவனத்திற்கு 2012 ஆம் ஆண்டு ஒரு சவாலான ஆண்டாக நிச்சயம் அமையும்.

# டிப்ஸ்... டிப்ஸ்...

உங்கள் திரையில் பல விண்டோக்களைத் திறந்து வைத்து இயங்கிக் கொண்டிருக்கிறீர்களா?அனைத்தையும் மூடி திரையில் இருக்கும் ஒரு ஐகனைக் கிளிக் செய்திட விரும்புகிறீர்களா?விண்டோஸ் (Windows) கீயை (கொண்ட்ரோல் மற்றும் ஓல்ட் கீகளுககு நடுவே விண்டோஸ் படத்துடன் உள்ள கீ) அழுத்திக் கொண்டு அதனுடன் ஈ கீயை அழுத்தவும். அனைத்து விண்டோக்களும் மினிமைஸ் செய்யப்படும்.(ஐயோ! மீண்டும் அவை வேண்டுமே என்று எண்ணுகிறீர்களா? மறுபடியும் அதே போல அந்த இரண்டு கீகளையும் அழுத்துங்கள். மீண்டும் அவை கிடைக்கும்.

# நினைவிற் கொள்க

**முகவரி டைப்பிங்:**

இன்டர்நெட் பிரவுசிங் போது இணைய முகவரியை (URL) டைப் செய்திடுகையில் அதன் இறுதித் துணைப் பெயர் com என இருந்தால் முழுவதும் டைப் செய்திடத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக www. microsoft.com என டைப் செய்திட வேண்டி இருந்தால் microsoft என மட்டும் டைப் செய்து கொண்ட்ரோல் + என்டர் தட்டினால் போதும்.பிரவுசர் www. microsoft,com என அமைத்து அந்த முகவரிக்கான இணைய தளத்தை உங்க ளுக்குக் காட்டும்.

**பைலை முற்றிலுமாக நீக்க:**

நாம் அடிக்கடி தேவையற்ற பைலை அழிக்கிறோம்.அழிக்கப்படும் பைல் ரீ சைக்கிள்பின் தொட்டியில் போய் தங்குகிறது.எனவே பைல் அழியாமல் கணனியில் இன்னொரு இடத்தில் போய் அமர்ந்து கொள்கிறது.எனவே இதனால் ஹார்ட்டிஸ்க் ஸ்பேஸ் நமக்கு மிச்சப்படப் போவதில்லை.அந்த பைல் முழுமையாக அழிந்தால் தான் இடம் கிடைக்கும்.எனவே ரீ சைக்கிள் பின் தொட்டிக்கு போகாமல் பைல் முற்றிலுமாக நீக்கப்படவேண்டும் என்றால் அந்த பைலைத் தேர்ந்தெடுத்து டிலீட் பட்டனை அழுத்துகையில் ஷிப்ட் கீயை அழுத்தியபடி அழுத்தவும். பைல் ரீ சைக்கிள் பின்னுக்குச் சொல்லாது.

# உங்களுக்குத் தெரியுமா?

- அடுத்தடுத்து வேகமாக டைப் செய்திடுகையில் தொடர்ந்து இருக்கும் கீகள் இணைந்து ஜம் ஆகி நின்றுவிடக்கூடாது என்பதால்தான் கணனி கீபோர்டாக குவெர்ட்டி கீபோர்ட் எடுத்துக்கொள்ளப்பட்டது.
- இணைய இணைப்பின் வேகம் 8Mb/sec என்று சொன்னால் அது விநாடிக்கு 8 மெகாபிட்ஸ் என்று பொருள்.மெகாபைட்ஸ் அல்ல.
- பேர்சனல் கணனி ஒன்றின் முதலுதவிப் பெட்டியில் எமர்ஜென்ஸி பூட் சிடி அல்லது பிளாஷ்ட்ரைவ் இருக்கவேண்டும்.
- லப்டொப்பின் பற்றரி திறனை நீண்டநாள் பாதுகாப்பாகப் பெற திரையின் வெளிச்சத்தைக் குறைப்பது நல்லது.
- விண்டோஸ் எக்ஸ்பியின் திரைத்தோற்றத்தில் மாற்றப்படா நிலையில் மிகப்பெரிய பச்சைப் புல்வெளிமேடுத் பின்னணியில் மலையும் உள்ளதல்லவா? இதனை விண்டோஸ் பிளிஸ் (Bliss) எனப் பெயரிட்டுள்ளது. இந்த அழகான காட்சியைப் போட்டோவாக எடுத்தவர் பெயர் சார்ல்ஸ் ஓ ரியர் (Charles O'Rear). கலிபோர்னியாவில் சொனாமா கவுண்ட்மி என்ற இடத்தில் இந்தப் போட்டோ எடுக்கப்பட்டது.

இதனைப் பின்னர் மைக்ரோசொப்ட் பணம் கொடுத்து விலைக்குவாங்கி தன் எக்ஸ்பி சிஸ்டத்தில் மாறா நிலையில் உள்ள டெக்ஸ்டொப் இமேஜாகப் பயன்படுத்தியது.

மக்கள் எல்லாவற்றையும் மிக்க கவனத்துடன் நிதானித்துப் பார்த்தால் தீமையிலும் நன்மைகள் இருக்கக் காணலாம். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஆசிரியர் இடமாற்றம்-விசாரணை யமதர்மன் தலைமையில் ஆணைக்குழு

மகாசிவம் எங்கே என்ற யமதர்மராஜனின் கேள்விக்கு அவர் ஓய்வுபெற்றுவிட்டதாக ஆசிரியர் தொழிற்சங்கம் தெரிவிக்க,

நாரதரின் மாம்பழம் முதல் ஆசிரியர் சங்கம் வரை மகாசிவமும் சரவணபவனும் சர்ச்சை தான் என்று யமன் முனுமுணுத்தவாறு...

யார் அங்கே ?

சித்திரகுப்தன்: கல்விப்பணிப்பாளர்கள்... கல்விப் பணிப்பாளர்கள்...

யமன்: இடமாற்றம் உங்கள் நிம்மதியைக் கெடுக்கிறதல்லவா?

க.ப.: ஆம்! சுவாமி.

யமன்: வன்னிக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர் ஒருவருக்கு குழந்தைகள் இருக்கிறார்கள். பெற்றோரைக் கவனிக்கும் பொறுப்பும் அவருடையதுதான். இது உண்மையும் கூட. அப்படியானால், இவரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யும் அதிகாரம் உங்களுக்கு உண்டா?

க.ப.: இல்லை...

யமன்: அப்படியானால் உங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரம் .

க.ப.: அதுதான் எங்களுக்குத் தெரியவில்லை.

யமன்: இடமாற்றம் தொடர்பில் கர்ப்பவதியாக உள்ள ஆசிரியைகளை யாரேனும் ஏசுவது உண்டா?

க.ப.:.... மௌனம்.

யமன்: இலங்கையில் ஒரு பொலிஸ்காரர் மூன்றாவது குழந்தையைப் பிரசவித்தால் ஒரு இலட்சம் ரூபாய் சன்மானமாக வழங்கப்படுவது உங்களுக்குத் தெரியுமா?

க.ப்.:ஆம்! சுவாமி.

யமன்: அப்படியானால் ஒரு தமிழ் ஆசிரியை தான் பெற்ற குழந்தையை வளர்ப்பதற்கு நிறையச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமல்லவா?

க.ப.:ஆம்! பிரபு

யமன்: தன் பிள்ளையைப் பாதுகாப்பாக விட்டு வராத ஒரு ஆசிரியையால் மன விருப்பத்தோடு கல்வி கற்பிக்க முடியுமா?

க.ப: இல்லை.

யமன்: அப்படியானால், ஆசிரியர் இடமாற்றம், ஆளுநர் விடுத்த கண்டிப்பான உத்தரவு, வன்னிக்கு ஆசிரியர்களை இடமாற்றியே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் ஆசிரியர் இடமாற்றத்தைச் செய்து அங்கும் குழப்பி இங்கும் குழப்பி என்னே அபத்தம்...

யமன்: நீங்கள் போகலாம்.

சித்திரகுப்தன்: இப்போது சபையோர் கருத்துத் தெரிவிக்கலாம்.

சபை: இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் இடிபடுகிறார்கள்.

ஐயா! யமதர்மராசா! கைக்குழந்தை. பால் நினைந்தல்ல; குழந்தை அழுதாலும் பால் கொடுக்க முடியாத பரிதாபம்.

இதோ! பாரிசவாதம் வந்த தந்தை. நீயும் உதவுவதாக இல்லை. இவர்கள் இரங்குவதாகவும் இல்லை. என் செய்வோம்!

யமன்: நீங்கள் இப்படிக் கூறினால் வன்னியில் இடமாற்றம் கேட்டு நிற்கும் ஆசிரியர்கள் என்ன செய்வது?

ஏதேனும் மாற்றுவழி உண்டா?

சபை: நாங்கள் பளைக்கும் போகலாம், பூநகரிக்கும் போகலாம். பண்ணை கடந்து மண்டைதீவு தொடக்கம் மண்கும்பான்வரை செல்லலாம்.

வன்னிக்கு மட்டும் வேண்டாம் ஐயா!

யமன்: ஐயோ! நான் என் செய்வேன். என் வாழ்க்கையில் இப்படியொரு பிரச்சினையை நான் சந்திக்கவேயில்லை.

(யமன் மனைவி தொலைபேசியில்)நாதா ஐயோ என்று என்னை அழைத்தீர்களா?

யமன்: அடி விசரி. விவஸ்தையில்லாமல் இந்த நேரத்தில்.

யமதர்மராஜசபை சிறிதுநேரம் ஆராய்கிறது.

(தீர்ப்பு நாளை)

## ஹெரோயின் விநியோகித்தவர் கைது செய்யப்பட்டார்

(கொழும்பு)

நீண்ட காலமாக ஹெரோயின் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் பெல்லந்தர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் ஹெரொயின் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபரிடமிருந்து. சுமார் 240 ஹெரோயின் பக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் கைது செய்யப்பட்டவர்கள் கல்சிசை -படோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (2-14)

## திருவெம்பாவை 15




திருச்சிற்றம்பலம்

ஓர்ஒருகால் எம்பெருமான் என்றென்றே
நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர் ஒருகால் ஓவா நெடுந்தாரைகண்பனிப்பப்
பார் ஒருகால் வந்தனையாள்
விண்ணோரைத்தான் பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்தொருவர்
ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தான்
வார்உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந்து ஆடலோர்
எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

தோழியர்: சிவபெருமானின் மீது குறையாத அன்பு கொண்ட பெண் அவனது திருநாமத்தை ஓயாமல் சொல்லிக்கொண்டே இருக்கிறாள். அதோடு மட்டுமல்லாமல் சிவபெருமானைப் புகழ்ந்து அவனது பெருமைகளையும்கூறி ஆனந்தக்கண்ணீர் வடிக்கின்றாள். அவர் மீது மட்டும் பித்தாய் அலைகின்றாள். அவளது பக்தியின் பெருமை தான் என்னே. கச்சை அணிந்த மார்பினை உடைய பெண்களே ! நீங்களும் அவளைப் போல ஞானமே உருக்கொண்ட சிவபெருமானின் திருவடியைப் புகழ்ந்து அழகிய நறுமணம் வீசக்கூடிய மலர்கள் நிறைந்த குளத்தில் நீராடி மகிழ்ச்சி அடையுங்கள் என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பெண்கள் தேவிக்கு பொங்கல் படைக்க வேண்டுமா?

நம் கோயில்களில் வருடம்தோறும் கொண்டாட்டத்துடன் நடத்தும் ஓர் சடங்கு பொங்கல். கோயிலில் மட்டுமல்ல விசேட நாட்களிலும் வீட்டு முற்றத்தில் பொங்கல் படைக்கின்றனர். கொங்கிறீட் வீடுகளும் வளர்ந்து நவீன மயமாக மாறிவரும் காலத்தில் இது குறைந்து வருகின்றது.

பக்தி வெளிப்படுதலால் தேவி நாமங்களை சொல்லி கொண்டே பக்தர்கள் தேவதைகளுக்குப் பொங்கல் படைக்கின்றனர். ஜகத் மாதாவான பராசக்தியை பூஜிக்கும் போது மாதாவுக்கு முன் அந்த சத்சொரூபத்தை இதன் வாயிலாக சமர்ப்பிக்கின்றனர். இருளை அகற்றி ஒளிக்காக வேண்டுவதே இச்சடங்கின் முக்கிய நோக்கம். மேலும் தங்கள் வெற்றி தோல்விகளையும் ஆசைகளையும் விபரித்து ஆறுதலடைவது இதனால் பெறும் பயன்.

திராவிட மக்களில் பய பக்தியுடன் விசுவாசத்துடனும் பெண்கள் பொங்கல் படைக்கும் போது பானைகளில் கொதித்து பொங்கு-வது அகம் என்றே நம்பிக்கை. அகம் அழிந்து கடைசியில் அது நைவேத்தயமாக மாறுகின்றது.

கடும் வெப்பம், மூச்சு திணற வைக்கும் புகை, ஓசை நிறைந்த சூழ்நிலை முதலியவை பெண்களின் அன்றாட வாழ்க்கையில் சோதனைகளையும் இக்கட்டான நிலைகளையும் சமாளிக்கும் திறனை அளிக்கின்றன.

மண்பானையில் பொங்கலிடுவதன் நன்மை சிறப்பானது .மண்பானையில் சமைக்கும் உணவிலுள்ள அசுத்தங்களை மண்பானை உறிஞ்சி எடுக்கும் என்பதை அறிவியல் சுட்டிக்காட்டியுள்ளது.



## வெள்ளி நற்சிந்தனை

54

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

துறவிகள் உலக வாழ்க்கையை விட்டு இறையருளைப் பெற பல செயற்பாடுகளைச்செய்வர். உடம்பை வெறுப்பார்கள். அளவில்லாத நீண்ட காலம் தவம் செய்வார். உடலை வெறுப்பதற்காக உடலுக்கு மிக இன்றியமையாத உணவு முதலியவற்றைக் கொடாமல் தவம் செய்வார் கள் .இவர்களை முனிவர் என்பர். முனிதல் என்பது கடுமையான கோபம் கொள்ளவதாகும்.கோபம் என்பது வடசொல். முனிதல் என்பது தமிழ்ச்சொல். மணிவாசகரும் முனிவர்களைப் போல உடலை வெறுத்து இறைவனிடம் செல்லப் பெரிதும் விரும்புகிறார். ஆனால் அவரால் முடியவில்லை.

தனது முயற்சிகளால் உடம்பை அழிக்க முடியவில்லையே என இறைவனிடம் முறைப்பாடு செய்கிறார். மலமாக்குரம்பை எனத் தனது உடலைக் குறிப்பிடுகிறார்.குரம்பை என்பது வேயப்பட்ட சிறிய வீட்டைக் குறிப்பது. நமது உடலும் அத்தகையதொரு வீடே என்பது மணிவாசகருடைய கருத்தாகும். மலங்களையுடைய யாக்கையாதலாலும் குரம்பை எனக் குறிப்பிட்டுள்ளார்.புழுக்களால் பொதிக்கப்பட்ட குரம்பை எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த உடம்பையுடைய தன்னை இறைவன் வலிய வந்து ஆட்கொண்டபோதும் அவர் அதை மறந்து உலகவாழ்க்கையில் ஈடுபட்டார். எனவே தன்னைப் பாவி எனக் கூறுகிறார்.

இறைவனை மீண்டும் காண வேண்டும் என்பதே அவரது விருப்பாக உள்ளது. ஆனால் எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு மீண்டும் இறைவனைக் காணலாம் என்பதே அவருடைய ஆத்மீக தேடலாகவுள்ளது.தன்னுடைய நிலையை அலவாநிற்கும் அன்பிலேன் என எடுத்துரைக்கிறார். அன்பில்லாதவன் எனத் தன்னை அவர் கூறுவதற்கும் ஒரு காரணமுண்டு.ஒருவர் எம்மீது அன்பு கொண்டு வலிய வந்து நட்புப்பாராட்டும் போது அதனை நாம் சிலவேளைகளில் கண்டு கொள்வதில்லை. மணிவாசகர் நிலையும் இதுவே.வலிய இறைவன் வந்து ஆட்கொண்டதைக் கருத்தில் கொள்ளாது மீண்டும் உலக இன்பங்களையே நாடிச்சென்றவர்.அதனை அவர் வெளிப்படையாகச் சொல்லத்தயங்கவில்லை.

மாணிக்கம் போல ஒளிவீசும் இறைவனை மீண்டும் காணவேண்டும் என்பதே அவருடைய நோக்காக உள்ளது. பங்கமில்லாதவர்க்கு இறைவனிடம் பற்று ஏற்படாது. இறைவனும் அவர்களுக்கு அருள் செய்யமாட்டான் என்பதையே மணிவாசகர் தனது பாடலின் மூலம் உணர்த்த விரும்புகிறார். மணிவாசகருடைய கல்வியறிவு இறையருள் பற்றிய கருத்தினை அவருக்கு ஊட்டியிருந்த போதும் செயற்பாட்டில் அது பற்றிய தொடர்ச்சியை அவரால் மேற்கொள்ள முடியவில்லை.

அவருடைய பாடல்கள் எல்லாவற்றிலும் பரவிக்கிடக்கும் இந்த இயலாமை உணர்வு எம்மையும் தொற்றிக் கொள்கிறது.எமது நிலையும் நாம் மீளாய்வு

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

செய்யத்தூண்டுகிறது.

மனம் ஒருப்படாத நிலையில் வழிபாட்டை மேற் கொள்ள முடியாது. அதற்காக விரத முதலியவற்றால் உடலை வருத்துவதால் பயனில்லை. மணிவாசகர் எமக்கு இதனையே கூற விழைந்துள்ளார் என கொண்டெழுகேன் என இறைவனிடம் கேட்டு நிற்பது எமக்கு ஓரு விளக்கமாக அமைந்துள்ளது.

*உலவாக்கலாம் தவமெய்தி உறுப் பும்*
*வெறுத்திங்குனைக் காண்பான்*
*பலமா முனிவர் நனிவாடப் பாவி*
*யேனைப் பணி கொண்டாய்*
*மலமாக் குரம்பை இது மாய்க்க*
*மாட்டேன் மணியே உனைக் காண்*
*பான்*
*அலவா நிற்கும் அன்பிலேன் என்*
*கொண்டெழுகேன் எம் மானே.*

# மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு அதிகாரிகள் விரைவாக பணிபுரிய வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்ற போதும் அவற்றைவிட மக்களின் தேவைகள் அதிகமாகவுள்ளது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் என்றிப் திட்டத்தின் பணிப்பாளராக செயற்பட்ட வைத்தியர் சிவகுமார் தனது பொறுப்புக்களை கடந்த 10 ஆம் திகதி வவுனியா மாவட்ட என்றிப் திட்டக் காரியாலயத்தில் வைத்து லியனகேயிடம் ஒப்படைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மீள்குடியேறிய பகுதிகளில் பல்வேறு திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றபோதும் அவற்றைவிட மக்களின் தேவைகள் அதிகமாக இருக்கின்றன.

எனவே, திட்டங்களை மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துபவர்களின் சேவையை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இத்திட்டம் வடமாகாணத்திலே செயற்படுத்தப் பட்டது. இதன்மூலம் 4ஆயிரத்து 648 மில்லியன் ரூபா வடமாகாணத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

2012 ஆம் ஆண்டிலும் பல திட்டங்களை வடமாகாணத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான திட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன.

அரசாங்கம் மீள் எழுச்சித்திட்டத்தினூடாக பெருந்தொகையான பணத்தை இப்பகுதிக்கு ஒதுக்கீடு செய்ய தயாராக இருக்கின்றது. இந்நிகழ்வில் உலகவங்கியின் பிரதிநிதியான மனோகரன் மற்றும் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் திட்டப்பணிப்பாளர்கள், மீள் எழுச்சித்திட்டம், என்றிப் திட்டம் ஆகியவற்றின் பிரதித்திட்டப் பணிப்பாளர்கள் , உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-6)

# எஸ்.பியின் பொறுப்பற்ற தன்மையே யாழ்.பல்கலையில் வெளியிட்ட கருத்து



## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மாணவர்களிடத்தில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வை மற்றுமொரு ஆயுதப் போராட்டத்துக்கு தயார்படுத்தல் என அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவினால் அடையாளப்படுத்தப்படுவது அவரது பொறுப்பற்ற தன்மையை எடுத்துக் காட்டியிருக்கின்றது.

அத்துடன் தமிழ் இளைஞர்களோ தெற்கிலுள்ள சிங்கள இளைஞர்களோ தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தினரே தவிர அதனை விரும்பி அவர்கள் செய்யவில்லையென்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அமைச்சர் எஸ்.பி.யாழ். பல்கலைக்கழகத்தில் வெளியிட்ட கூற்று தொடர்பிலேயே மனோகணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தமிழ்ப் பிரதேசங்களில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்கள் தொடர்பில் அரசாங்கம் அடக்கு முறையை பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்ட அவர் தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல்கள் இடம் பெறுவதாகவும் இதனை எதிர்த்து போராட்டங்களை நடத்துவதற்கும் முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எஸ்.பி.திசாநாயக்க ஜே.வி.பி. இயக்கத்தில் செயற்பட்டவர் என்ற காரணத்தாலும் பல்கலைக்கழக மாணவர் அமைப்பில் செயற்பட்டவர் என்பதாலும் அவர் மாணவர்களின் பிரச்சினைகளை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (2-14)

# இலங்கை மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் இந்துமத அலுவல்கள் இணைப்பாளர் பிரம்ம ஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா அவர்களின் இரங்கற் செய்தி



*ராஜா மறைந்ததுவோ!*

நீறு பூத்த நெற்றியும் நிமிர்ந்த நன்நடையும் நேரான பார்வையும் அன்போடு எல்லோரையும் வசீகரிக்கும் பேச்சு வன்மையும் கொண்ட அமரர் வீரவாகு ஜெகவதனராஜா தான் வாழ்ந்த காலத்தில் ஊராரும் உற்றாரும் போற்றுவதற்குரிய ஓர் பெருமானாக வாழ்ந்து வந்துள்ளார். அவர் தமது கிராமத்திற்கு ஆற்றிய பணிகள் இன்றும் மக்கள் மனதில் நிழலாடுகின்றன. சிறந்த குடும்பத் தலைவராகவும் அளப்பரிய பேறு பெற்ற ஓர் தந்தையாகவும் ஊருக்கு ஓர் தொண்டராகவும் வாழ்ந்த காட்டியவரின் மறைவு அனைவருக் கும் மிகப் பேரிழப்பாகும்.

சமூக சமய சேவகியும் சமய சொற்பொழிவாளராகவும் சமய ஆசிரியையாகவும் விளங்கிய திருமதி கனகாம்புஜம் அவர்களை தனது துணைவியாக ஏற்றதுடன் சகல நடவடிக்கையிலும் அவருக்கு பக்கபலமாக வாழ்ந்ததுடன் ஆசை மகளான செல்வி ஞானகலைக்கும் தான் இறக்கும் வரையில் ஏற்ற பணிவிடைகளை பாசத்துடன் மேற்கொண்டவராவார்.

திடீரென அமரத்துவம் அடைந்த அமரர் வீரவாகு ஜெகவதனராஜாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதுடன் அன்னாரது மனைவி, மகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மெனிங்பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு.

பிரம்ம ஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள்
பாபு சர்மா, அவர்கள்
ஜனாதிபதியின் இந்து மத அலுவல்கள்
இணைப்பாளர்.

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

---

ஆசனப்பட்டி அணியாமல் வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

---

காப்புறுதி அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், வாகனப் பதிவு ஆகியவை இல்லாமல் வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

---

சாரதி அனுமதிப்பத்திரம், வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனத்தை செலுத்தியதன் குற்றச்சாட்டில் யாழ்.பொலிஸாரால் நபர் இருவர் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் இருவருக்கும் தலா ஆறாயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

---

நடைபாதைக்கும் ஏனைய வாகனங்களுக்கும் இடையூறாக வாகனத்தை செலுத்தினர் எனும் குற்றச்சாட்டில் இருநபர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

---

அதிகளவான பயணிகளையும் கட்டுப்பாடின்றி அதிவேகமாக வாகனத்தை செலுத்தி னார் என்ற குற்றச்சாட்டில் இரு நபர்கள் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் இருவரும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

---

நீதிமன்ற செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதமாக ஒலி பெருக்கியின் ஒலியை ஒலிக்கவிட்ட நபர் ஒருவரை யாழ்.பொலிஸார் கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா இவ்விடயம் நீதிமன்றை அவமதிக்கும் குற்றமாகும் என்பதனால் குறித்த நபருக்கு ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

---

குளிர்பானத்தை பொறிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று பேருக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளெனக் கண்டு தலா 6 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின்இருவருக்கு 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் ஒருவருக்கு 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

---

அனுமதிப்பத்திரம்இன்றி பட்டாசு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

---

பனடோல் பொறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் நபரொருவருக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்துள்ளார்.

(2-4)




# மின்சார சபையின் மின் இணைப்பு கம்பிகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்சார சபை நிலையத்தில் நேற்று முன்தினம் ஆறு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மின் இணைப்பு கம்பிகள் திருட்டு போயுள்ளது.

மின்சார சபை மேற்பார்வையாளர் காலை சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்தபோது மின்சாரக் கம்பி திருட்டுப்போயிருப்பது தெரிய வந்தது.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா-6,11)

# கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறிவிழுந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று நண்பகல் அராலி தெற்குப்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த மாரிமுத்து இராசம்மா (வயது 87) என்பவரே கிணற்றுக்குள் தவறிவிழுந்து உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் நேற்றுமாலை 7 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (பா-11)

# மின் தடைப்படாது

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி நாளை சனிக்கிழமை இடம்பெறுவதாக இருந்த மின்தடை குடாநாட்டில் எந்தவொரு இடத்திலும் அமுல் படுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# பல்கலை ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படுகிறது

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் இன்று உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார். (பா)


## யாழ்ப்பாணம் மாநகர சபை
## ஆதனவரி அறிவித்தல் - 2012

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி யாழ்ப்பாணம் மாநகர சபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத் தரப்படுகின்றது.

1. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238ஆம் 247ஆம் பிரிவுகளின் பிரகாரம் நேர்முன் ஆண்டான 2011ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டை அல்லது ஆதன மதிப்பீட்டையே 2012ம் ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாக கொள்ளுதல்.
2. 2012ஆம் ஆண்டிற்கான வீதவரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாய தவணைகளில் 2012ம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன்30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.
3. 2012ஆம் ஆண்டு ஜனவரி 31ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வருடாந்த வீத வரிகள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு பத்து சதவீதம் (10%) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாக உள்ள அந்தக்கந்தாயத்திற்குரிய முதல்மாதத்திற்குள்ளாக கந்தாய வரி செலுத்தப்பட்டால் ஒரு ஐந்து சதவீதம் (5%) கழிவு அனுமதிக்கப்படும்.
4. மேற்கூறப்பட்ட பந்தி 2 இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளுக்கு முன்பு குறித்த வீத வரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது பதினைந்து சதவீதத்திலும் (15%) ஏனைய இடங்கள் மீது இருபது சதவீதத்திலுமான (20%) விறாந்துச் செலவு அறவிடப்படும்.
5. மேலும் புதிதாக காணி கட்டடங்களைக் கொள்வனவு செய்வோர் அவற்றுக்கான ஆதனப் பெயர் மாற்றங்களை உடன் மேற்கொள்ளுமாறும், புதியகட்டடங்களைக் கட்டும் போதும், சேதமடைந்த ஆதனங்களைத் திருத்தம் செய்யும் போதும் மாநகர சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்துகின்றேன்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2012.01.03

திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம். (C-5521)


# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து அடுத்த வருடம் தோனி ஓய்வு!

2015ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில் தான் விளையாடுவதாக இருந்தால் அடுத்த வருடத்துடன் டெஸ்ட் போட்டிகளில் இருந்து தான் ஓய்வு பெறக்கூடும் என இந்தியகிரிக்கெட் அணித்தலைவர்மஹேந்திர சிங் தோனி கூறியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டிகளில் நான் விளையாடுவதாக இருந்தால் மற்றைய வகைப் போட்டியிலிருந்து ஓய்வுபெற வேண்டியிருக்கும் என அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த போது தோனி கூறினார்.

30 வயதான தோனி இதுவரை 66 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர் தலைமையில் இந்திய அணி விளையாடிய 36 டெஸ்ட் போட்டிகளில் 17 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது.

2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளில் தான் பங்கு பற்ற முடியுமா என்பதை 2013 ஆம் ஆண்டு தீர்மானிக்கவுள்ளதாக தோனி ஏற்கெனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டுக்காக இத் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



2015 உலகக்கிண்ணப் போட்டிகளில் எனக்கு பதிலாக விளையாடுபவர் அதற்கு குறைந்த பட்சம் 70 - 80 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலாவது விளையாட வாய்ப்பு கிடைக்க வேண்டும். இது எனது தனிப்பட்ட நிலைப்பாடு என தோனி தெரிவித்துள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் சிறந்த அணித் தலைவராகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தோனி கருதப்படுகிறார்.

எனினும் டெஸ்ட் போட்டிகளில் அவர் தலைமையிலான இந்திய அணி வெளிநாடுகளில் வெற்றி பெறுவதற்கு அண்மைக் காலமாக திணறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

NIRU
KONDAVIL
A/L DAY CLASS
Po.Sci - திரு. இளங்கோ
Logic - திரு. சயந்தன்
Ta - திரு. குகன்
H.C - திரு. சிவமகாலிங்கம்
ஆரம்பம் : 14.01.2012
சனி

## ஐ.தே.கவின்...

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட சஜித் அணியின் பிரமுகர் ஒருவர், கடந்த 17 வருடகாலமாக ஐ.தே.க., தொடர்ச்சியாகத் தோல்விகளையே சந்தித்து வருகின்றது என குறிப்பிட்டார்.

முக்கியமான காலகட்டங்களை நாடு சந்தித்தபோது, கட்சி உறுப்பினர்களின் விருப்பத்திற்கு முரணாக கட்சித் தலைவரும் அவரது ஆதரவாளர்களும் செயற்பட்டமை தொடர்பாக இந்த நூல் விபரிக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

கட்சியின் முன்னாள் உப தலைவர் ருக்மன் சேனநாயக்கவும், முன்னாள் பிரதித் தவிசாளர் பாக்கீர் மாக்காரும் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்குவார்கள். (பர)

## மன்னிப்புக் கோரு...

உத்தரவிட்டுள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றும், ஊடகத்துறை அமைச்சர் ரம்புக்வெலவின் மகள் சந்துலவிடம் தவறாக நடந்து கொண்டதற்காக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து விசாரிக்க ஜனாதிபதி செயலகத்தை சேர்ந்த இரண்டு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

எனினும் சந்துலவிடம் தவறாக நடந்து கொண்டதற்காக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஏற்கெனவே மன்னிப்புக் கோரியுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை இந்த விவகாரத்தை இதற்கு மேல் பெரிதுபடுத்த வேண்டாம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் கூறியுள்ளதாகவும் லங்கா நியூஸ்வெப் தகவல் வெளியிட்டுள்ளது.(பர)

Diploma Courses
upto 90%Discount.
Ms Office - Rs.~~4000~~
Multimedia - Rs.~~6000~~
Accounting - Rs.~~6000~~
AutoCAD-2&3D - Rs.~~10000~~
Web Development - Rs.~~10000~~
Free5 Course fee* Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English
MCS Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Scholorship
324,Palaly Road,Parameswara Junction

பணியாட்கள் தேவை
கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு
♦ விற்பனையாளர் ♦ கணக்காளர்
♦ சிட்டை எழுதுநர் ♦ கணனி இயக்குநர் (பெண்)
ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை.
தொடர்பு:
யாழ் போன் சொப்
இல. 9, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:- 0773611282 (C-5514)

AB Sports Club
(Aggressive Boys)
AB விளையாட்டுக் கழகம் கொக்குவில்
அணிக்கு 11 பேர் 16 பந்துப் பரிமாற்றம் கொண்ட கிரிக்கெற் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்ப முடிவுத் திகதி ~ 18.01.2012 (புதன்கிழமை)
விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் இடங்கள் :
1.AB அலுவலகம், பொற்பதி தொடர்புகளுக்கு:- 0777632048
2. Majestic net City, 105 Adiyapatham Road, Kokuvil. 0757653524 0788363444

## அமெரிக்க ...

களையும் சந்திக்கவுள்ளனர்.

அமெரிக்க பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் தந்திரோபாய கற்கை நிலையத்தின் அண்மைய கிழக்கு தெற்காசிய நிலையத்தைச் சேர்ந்த தூதுவர் ஜேம்ஸ் ஏ லரோக்கோ் ஜனவரி 15 முதல் 19-ம் திகதி வரை இலங்கை மற்றும் மாலைதீவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

வர்த்தக திணைக்களத்தின் ஆபிரிக்க, மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவுக்கான பிரதி உதவிச் செயலாளர் ஹொலி வினியார்ட் ஜனவரி 17 முதல் 19-ம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் அலிஸாஅய்ரெஸ் 18 முதல் 24ஆம் திகதி வரை இலங்கை மற்றும் மாலைதீவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம் , மனித உரிமைகள், தொழிலாளர் பிரிவுக்கான பிரதி உதவிச் செயலாளர் தோமஸ் ஓ மேலியா ஜனவரி 20 முதல் 26ம் திகதி வரை இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ளார். (பர)

## இந்திய மீனவர் ...

யில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் நால்வர் மீது நேற்று முன்தினமிரவு 10.00 மணியளவில் தென்னிலங்கை சிங்கள மீனவர்கள் இருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன் இந்திய மீனவர்கள் இருவரை பிடித்து வந்த சிங்கள மீனவர்கள் நேற்றுக் காலை 7.00 மணியளவில் நயினாதீவு கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் இருவரையும் கடற்படையினர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நிலையில் விசாரணைகளின் பொருட்டு சிங்கள மீனவர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த மீனவர்கள் நால்வரும் இன்று ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை நடுக்கடலில் விட்டுவந்த இரு இந்திய மீனவர்களும் தப்பித்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

(மற்றொரு செய்தி உள்ளே) (பர)

## இந்திய அர...

ஆகியவற்றால் கண்காணிக்கப்படவுள்ளதோடு மத்திய மற்றும் ஊவா மாகாண வீட்டுத் திட்டங்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கண்காணிக்கவுள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரத்தை ஜனாதிபதி சமர்ப்பித்ததோடு அதற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.(பர)

## நல்லிணக்கத்தை ஏற்படுத்து...

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையரசினால் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை கனடா கவனத்தில் கொண்டுள்ளது.

நாங்கள் இந்த அறிக்கையை ஆழமாக ஆராய்ந்து வருகின்றோம். இருந்த போதிலும், நல்லிணக்கம், சட்டத்தின் ஆட்சி, படைக்குறைப்பு குறித்த விடயங்களில் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தப் பரிந்துரைகளை குறிப்பிட்ட கால வரையறைக்குள் இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கனடா வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

போரின் இறுதிப்பகுதியில் புரியப்பட்டதாக கூறப்படும் மோசமான மனிதவுரிமை மீறல்கள் குறித்த பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்கு முழுமையாக பதிலளிக்கும் வகையில் இந்த அறிக்கை அமையவில்லை என்பதை கனடா கவனத்தில் கொண்டுள்ளது.

ஐ.நா நிபுணர் குழுவினால் குறிப்பிடப்பட்ட பல குற்றச்சாட்டுக்கள் குறித்த கருத்துக்களோ அதற்கான பரிகாரமோ நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் இல்லை. பொறுப்புக் கூறுதல் மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றில் இலங்கை அரசு அக்கறை காண்பிக்கவில்லை. இலங்கை அரசாங்கம் ஜனநாயகம், சுதந்திரம், மனிதவுரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் மீதுள்ள தனது கடப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சரின் அறிக்கையில் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது. (பா-11)

## கூட்டமைப்...

இரு தரப்பு உடன்பாடுகளில் கையெழுத்திடவுள்ளார். எதிர்வரும் 16ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் சிறப்பு விமானம் மூலம் எஸ்.எம். கிருஸ்ணா கொழும்பு வரவுள்ளார். அன்று மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து பேசுவார். அன்றிரவு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், கொன்ரினென்டல் விடுதியில் எஸ்.எம். கிருஸ்ணாவிற்கு இராப் போசன விருந்தளிப்பார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை பிரதமர் டி.எம்.ஜயரட்ணவை சந்தித்து பேசும் அவர். அதன்பின்னர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் இருதரப்பு உறவுகள் மற் றும் பிராந்திய விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்துவார்.

இதன்போது பல உடன்பாடுகள் மற்றும் புரிந்துணர்வு உடன்பாடுகளில் இரு நாடுகளும் கையெழுத்து இடவுள்ளன. அதன் பின்னர் இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் இணைந்துகூட்டறிக்கையொன்றைவெளியிடுவர்.

அத்துடன் செவ்வாய்க்கிழமை மாலை தாஜ் சமுத்ரா விடுதியில் எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்துவார்.

மறுநாள் புதன்கிழமை உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி செல்லும் அவர், அங்கு வைத்தியசாலைக்கு இந்தியா வழங்கும் மருத்துவ கருவிகளை கையளிப்பார்.

அன்று மதியம் உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வருகை தரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணாவிற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மதிய விருந்தளிப்பார்.

அதன்பின்னர் எஸ்.எம்.கிருஸ்ணா, அரியாலையில் நடைபெறும் நிகழ்வில் இந்திய உதவியுடன் கட்டப்பட்டுள்ள வீடுகளை உரிமையாளர்களிடம் கையளிப்பார்.

அத்துடன் யார்.நகருக்கு அண்மையில் நடைபெறும் நிகழ்வொன்றில் இடம்பெயர்ந்த மக்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை யும் வழங்கவுள்ளார்.

அன்று மாலை விமானப்படை விமானம் மூலம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பு திரும்புவார்.

அத்துடன் வியாழக்கிழமை காலையில் காலி - இந்துருவ தெற்கு தொடருந்து பாதை அமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் அவர், அங்கிருந்து உலங்கு வானூர்தியில் கட்டுநாயக்க விமானநிலையம் சென்று சிறப்பு விமானம் மூலம் பிற்பகலில் புது டில்லி பயணமாவார்.

இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. (மற்றொரு செய்தி உள்ளே) (பா-11)

## சட்டமாணி கற்கைநெறி நாளை நுழைவுப் பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்தியத்தில் சட்டமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நுழைவுத் தேர்வுப்பரீட்சை நாளை 14-ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டையை உறுதிப்படுத்தி பரீட்சை மண்டபத்தில் ஒப்படைக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். சட்டமாணி கற்கைநெறிக்கு 821 பேர் விண்ணப்பித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## இலங்கையில்...

இதேபோல வாழ்க்கைச் செலவு மிகக் குறைந்து காணப்படும் முதல் 3 மாவட்டங்ள் மாத்தறை (ரூ.3,178), அநுராதபுரம் (ரூ.3,241) மற்றும் குருநாகல் (ரூ.3,251) ஆகும்.(பா-11)

அவுஸ்திரேலியா
முற்பணங்கள் இல்லாமல் அவுஸ்திரேலியா
3 மாத காலத்தில் செல்ல
இலவச ஆலோசனை
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016 (7293)

இலண்டன் விசா
ஆங்கிலப்பரீட்சை இல்லாமல் இலண்டன்
உடனடியாகச் செல்ல
இலவச ஆலோசனைகளுக்கு
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212219016 (7293)

விற்பனைக்கு
நீலநிற சவாரி மோட்டார் சைக்கிள் 49 சிசி 500கி.மீற்றர் மட்டும் ஓடியது. 24000 BTU A/C யும் விற்பனைக்குண்டு.
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை] (7293)

A/L 2014 தமிழ்
வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களின் புகழ் பூத்த பிரபல தமிழ் ஆசிரியர் இரா. அகிலன்
இப்பொழுது சுன்னாகத்தில். சனி, ஞாயிறு :- 4.00 மணி
மேலதிக தகவல்கள் அலுவலகத்தில்
ACA கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
[எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக] (7289)

கிளிநொச்சியில் பதவி வெற்றிடம்
திசைகாட்டியின் கிளிநொச்சி கிளை அலுவலகத்தில்
பெண் எழுதுவினைஞர் பயிலுநர் பதவிக்கு வெற்றிடங்கள் உண்டு. க.பொ.த.சாதாரண தரச் சித்தி. வயதெல்லை 22-45 வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டும் உரிய ஆவணங்களுடன் 14.01.2012 மு.ப. 11 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.
தலைமைக் காரியாலயம்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை] (7293)

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம், இணுவில்
பாரதி - சித்தங்கேணி
எஸ். கோகுலன்
பொருளியல்
A/L 2014
Day Class
ஆரம்பமாகிவிட்டது
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
யாழ் நகரில் எமக்கு வேறு நிறுவனம் இல்லை. நீங்கள் வரும்போது நாவலர் றோட்டில் அமைந்துள்ள பொருளியற் கல்லூரி என்று கேட்டு வாருங்கள்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.